உ
சிவமயம்

காரியானூர் சுவாமிகள் என்னும்

திருவார் திரு நடேசஞான தேசிக சுவாமிகள்

வரலாறு

நூல் இயற்றியவர் :

சிவபூசைச்செல்வர்-யோகாசன ஆசிரியர்

ம.சந்தானம் என்னும்

சிவசண்முக சிவஞானதேசிகர்,

கும்பகோணம்.

பதிப்புரிமை :

சாந்தி ஆஸ்ரமம்,

காரியானூர்.

06-03-2005

உ
ஓம் தத் ஸத்
ஸ்ரீ பரப்ரஹ்மணே நம:

திருவண்ணாமலை - ஈசானிய மடம்
ஆதிமூல குருமூர்த்திகள்.



திருவார் திரு.ஈசானிய ஞான தேசிகர்.

சுவாமிகள் பொற்பாத கமலங்களில்
இந்நூலை பணிவுடன் அர்ப்பணிக்கின்றோம்.

உ

ஓம்

ஸ்ரீ சற்குரு சரணம்

சாற்றுக்கவி

ஸ்ரீ மகா கோவிந்த சுவாமிகள்

கோவிலூர் மரபு

ஸ்ரீ ஜகத்குரு சங்கர ஆசிரமம், கொப்பமாபுரி.

பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்.

சீர் கொண்ட புகழார்ந்த கோவிலூர் ஆதீனம்
சிறந்தகுரு பீடம் ஆர்ந்த
சீலமா தவத்திரு மகாதேவ தேசிகன்
தேர்ந்தமுற் சீடன் ஆனோன்

பேர் கொண்ட ஞானியர்கள் வாழும்மண் ணாமலை
பிறங்குமீ சான ஆசான்
பெருமடா லயபீடம் ஏற்றகுரு வானவன்
பேணுறுங் காரி யானூர்

பார் கொண்ட சமாதியா லயமிருந் தருளுவோன்
பரப்பிரம்ம ஞான சூர்யன்
பாங்குறு தவத்திரு நடேசதே சிகனாரின்
பண்புவர லாறு தோத்ரம்

நேர் கொண்ட முறைதொகுத்துலகரின் புறவளித்தார்
நிறைதவத் திருமி குந்த
நீதசிவ சண்முக சிவஞான தேசிகர்
நிலவுமலர் நீடு வாழ்க.

———

உ
ஓம்
ஸ்ரீ சற்குரு சரணம்

சாற்றுக்கவி
ஸ்ரீ—ம. கோவிந்த ஸ்வாமிகள்
கோவிலூர் மரபு.
ராமாஸ்ரமம் குகை சேலம்

நிலை மண்டில ஆசிரியப்பா.

பூமலி யுலகில் பனிகர் கள்பலர்
பாமலர் புகழ பாரினில் தோன்றினர்
அவர்களில் இந்நாள் அடியேங் களது
உவகையால் நெருங்கி உணர்ந்தவிப் பெரியோன்
துறவியல் நெறியில் தூய்மை பெற்றவன்
துறவியர் வணங்கும் துறவரில் துறவோன்
அன்னவன் கதையை அழகு மிளிரவும்
கன்னலும் கைக்க கருத்தில் இனிக்க
பத்திச் சுவையே புத்தகம் சொட்டவும்
உத்தம மாக ஓங்குமன் பாக
கனையக் கனையவும் கண்ணீர் பெருகவும்
அனைவருக் கன்பு பெருகவும் தந்தனன்
குப்பான் குளத்தில் ஒப்பிலா துயர்ந்த
தப்பிலா ருருவின் தாள்தலை கொள்வோன்
அரம்பைகீழ் அரப்பையாய் அமைந்தசந் தானம்
தெருள்சிவ சண்முக சிவஞான தேசிகன்
நடேச முனிபோல் நாமெலாம் நடந்து
விடாதுமெய் வீட்டை மேவுவோ மாக
நடேச குருபுகழ் நாடெலாம் விளங்குக
நடேசர் திருவடி நம்முளம் நிற்கவே.

- - - - -

உ

ஓம்

ஸ்ரீ சற்குரு சரணம்

ஸ்ரீ மத் ஞானானந்த கிரி சுவாமிகள்

சித்தலிங்க மடம்.

வாழ்த்துரை

"இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

என்ற திருவள்ளுவரின் நுணுகிய கருத்தினை, அநாதிகால முதலாகவே கடை பிடித்தொழுகுவதும் நம் இந்திய நாடு, அவ்வப்போது சிறந்த குருமார் தோன்றி, மக்களைப் பிறவிப் பெருங் கடலிலிருந்து கரையேறச் செய்வதும்; நம் பாரத நாட்டில் தொன்று தொட்டே நிகழ்ந்து வருவது, அங்ஙனம் கரையேற்றிய மூதறிஞர் வரலாறுகளை, நாம் அறிந்தால் நம் முன்னேற்றத்திற்கு அவை சிறந்த தூண்டுகோலாக அமையும்.

அருள்செயல் புரிந்தார் வரலாறுகளை எழுதி வைக்காத குறை நம் நாட்டிலேயே மிகுதியும் உண்டு. இனியும் அவ்வாறாய குறை நேராத வண்ணம் காப்பதோடு; இயன்ற வரை கிடைக்கும் ஆதாரங்களைக் கொண்டு; பெரியோர் வரலாறுகளை எழுதிவைத்தால், இந்நாளைய உலகிற்கு மிகவும் இன்றியமையாத சிறந்த தொண்டாகும். தொடர்ந்து இப்பணி வளர்க.

யாண்டும் சமய நெறி ஓங்கி, யாவரும் நலம் பல பெறுக என வாழ்த்தித் திருவருளை இறைஞ்சுகிறோம்.

ஸ்ரீ ஞானானந்த கிரி சுவாமிகள்.

தபோவனம்.

திருக்கோவிலூர்.

குறிப்பு : திருக்கோவிலூர் ஆதீனம் திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீ மத் ஞானியார் மடாலய வெளியீடு எண் - 17, " கோவில் ஆதீனக் குருமணி" என்ற நூலுக்கு 1967ம் ஆண்டில் ஸ்ரீ சுவாமிகள் தந்த முகவுரையிலிருந்து எடுத்தது.

உ

திருமுருகன் துணை

சு.அ. இராமசாமிப்புலவர், கருப்புக்கிளர், கோட்டூர் வழி

தஞ்சை மாவட்டம் 614 708.

பாராட்டுரை

நம்முடைய செந்தமிழ்நாட்டிலே; சங்கராச் சாரியாருடைய அத்வைதக் கொள்கையைப் பின்பற்றும் வேதாந்த மடாலயங்கள் பல உள்ளன. இம்மடங்களெல்லாம் முன்னாளில் உண்மையான துறவிகளாக விளங்கிய மகான்களால் ஏற்படுத்தப் பெற்றன. அத்தகைய உண்மைத் துறவிகளில் திருவண்ணாமலை ஈசான்யமடாதி பதியாக விளங்கி யிருந்து, அம்மடத்தின் தலைமைத் தன்மையையும் வேண்டாமென்று துறந்து சென்ற தவத்திரு. நடேச ஞானதேசிகரும் ஒருவர். இப்பெரியாருடைய பெருமையை மடங்களில் வசிக்கும் துறவிகள் கூட நனகுணர மாட்டார்கள்.

இத்தேசிகர் தமது திருமடத்தில் ஒரு குகையமைத்துக் கொண்டு பெரும்பாலும் அக்குகையிலேயே நிட்டை சாதித்துக்கொண்டிருந்தார். இப்பெரியாரிடம் தெய்வத் தன்மையும் அமைந்திருந்தது. இவருடைய வரலாறு எல்லாருக்குந் தெரியாது. அனைவரும் உணர்ந்து மனத் தெளிவு பெறவேண்டுமென்னும் நோக்கத்துடன் இப்பெரியார் தோன்றிய குலத்தில் தோன்றியவரும் கல்வி கேள்விகளிற் சிறந்த வருமாகிய கும்பகோணம் உயர்திரு.ப.சந்தானம் என்னும் சிவ சண்முக சிவ ஞானதேசிகர் அவர்கள் சிரமத்தைப் பொருட்படுத்தாது பல விடங்களுக்கும் அலைந்து திரிந்து மிகுந்த முயற்சியுடன் இவ்வரலாற்றை வரைந்துள்ளார்.

இதனை அன்பர்கள் படித்து உண்மைத் துறவியின் இலக்கணத்தினை அறிந்து கொள்ளலாம். இவ்வரலாற்றை எழுதி முடித்த ஆசிரியர் அவர்கட்கு பார்க்கவ குலப் பெருமக்களும் மற்றும் தவத்திரு நடேச ஞான தேசிகர் அவர்களின் பக்தர்களும் நன்றி பாராட்டுங் கடமையுள்ளவர்களாவார்.

சிவசண் முகமாம் சிவஞானப் பேரோன்
தவஞானச் செல்வரெனுந் தக்கார் – தவஞானி
சீரார் நடேசப் பேர்த் தேசிகனார் செய்திகளைப்
பாரார்க் குணர்த்தினான் பார்.

சு.அ. இராமசாமிப் புலவர்
கருப்புக் கிளர்.

அணிந்துரை

டாக்டர் மா. இராமலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
"எழில் முதல்வன்"

பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்.
அரசு ஆடவர் கல்லூரி;
கும்பகோணம்.

மனிதப் பிறவி, உண்மை காணும் நாட்டம், ஆற்றுப்படுத்தி ஆட்கொள்ள ஒரு ஞானாசிரியன் இம் மூன்றும் ஒருவனுக்கு இறையருளால் மட்டுமே கிட்ட வல்லன. நம் நாட்டு வேதங்களும் ஞான நூல்களும் குருவுக்கும் இறைவனுக்கும் பேதம் கற்பிப்பதே இல்லை. "குருவே பிரம்மா; குருவே திருமால்; குருவே தேவராகிய மகேச்வரர்; குருவே பரப்பிம்மம்; அந்த குருவின் திருவடிக் கமலங்களுக்கு என் வணக்கங்கள்" என்று பேசுகிறது குருகீதை.* இறைவனே அவ்வப்போது திருமேனி தாங்கி குருவடிவாக வந்து உயிர்களை ஆட்கொண்டு அருளுகிறான். ஆதி சங்கரரும், திரு மூலரும் மெய்கண்டாரும், தாயுமானாரும் இன்ன பிறரும் மானுட வடிவில் அவதாரம் செய்த பரப்பிரம்ம மேயாம். உலகை உய்விக்க வந்த இவ் அறவோர்கள் மனத்தூக் கண் மாசில்லாதவர்கள்; தவமே உருவானவர்கள்; பிறிதின் நோய் தன்நோய்போல் போற்றுபவர்கள்; தீரத் துறந்தவர்கள்; படிற்றொழுக்கம் இல்லாத பண்பாளர்கள். மெய்யுணர்வு கைவரப் பெற்ற மேலோர்கள். இப் பிரம்ம ஞானிகள்அன்றும் - இக்காலத்தும் - நம் மிடையே வாழ்ந்து வருவோரேயாவர். அவர்களை இனம் கண்டு போற்றவோ - அவர் வழி நிற்கவோ - சிற்றறிவும் சிறுதொழிலும் உடைய நம்மனோரால் எவ்வாறு இயலும்?

** குருர்–ப்ரஹ்மா குருர்–விஷ்ணுர்–குருர் தோவோ மஹேச்வர:!*
குருரேவ பரம்ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குருளேவ நம : !!

– குருகீதை I:46

வாழையடி வாழையென வளர்ந்து வரும் இக்குரு மரபில் ஸ்ரீலஸ்ரீ நடேச ஞான தேசிக சுவாமிகளும் ஒருவர். காரியானூர் சுவாமிகள் என்று போற்றப்படும் அவர்கள் அண்மைக்காலத்தில் நம் தலைமுறையில் - தமிழ் மண்ணில் வாழ்ந்து திருவருட்பேறு பெற்ற ஓர் ஒப்பற்ற பெருஞானி.

ஞானியர்களின் வரலாற்றை முறையாக எழுதி வைக்கும் பழக்கம் தமிழ் நாட்டில் மிகுதியாக இல்லை.

இந்த நிலை கண்டு நான் பலநாட்கள் வருந்திய துண்டு. (ஞானிகளும் சித்தர்களும் எங்காவது இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டால் அவர்களைத் தேடி நான் அலைந்திருக்கிறேன். அவ் அனுபூதிமான்கள் விதேக கைவல்யம் பெற்றுக் கரந்துறையும் பல அதிட்டானங்களைத் தரிசித்திருக்கிறேன். கொஞ்ச காலமாக இதுவே என்னுள் தாகமாக நின்று இயக்கி வருவதையும் நான் உணர்கிறேன்)

ஆகுலமோ ஆரவாரமோ இல்லாமல் உலகிற்குப் பயன்பட வாழ்ந்த அம்மகான்களின் ஆன்மீக வாழ்க்கையை யாரொருவர் எழுதி வெளியிட்டாலும் அவர்கள் தமிழ் உலகின் நன்றிக்கும் போற்றுதலுக்கும் உரியோரேயாவர். “காரியானூர் சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கமும் தோத்திரங்களும்” என்னும் இந்நூலை பெரியவர் சந்தானம் உடையார் என்னும் சிவ சண்முக சிவஞான தேசிகர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆன்மீக நாட்டமுடையார்க்கு இந்நூல் ஓர் ஆற்றுப்படை; உலகின் அவலக் கவலைகளில் மூழ்கி கடைத்தேற்றம் காணத் துடிப்பார்க்கு இஃதோர் கலங்கரை விளக்கம்.

தேசிகரவர்களின் இச்சிறு நூலில் காரியானூர் சுவாமிகளின் தூய வாழ்வும் தொண்டு மனமும் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. சுவாமிகளின் அற்புதச் செயல்களும் திருப்பணிகளும் விளக்கப் பட்டுள்ளன. இவ்வரிய

வரலாற்றின் பேரொளி நன்கு புலனாகும் வண்ணம் இடையிடையே பல திருத்தலங்களின் பெருமையும், பிறஞானியர்கள் பற்றிய குறிப்புகளும், பண்டைத் தமிழ்ச் சான்றோர் திருவாய் மலர்ந் தருளிய அருட்பாடல்களும் இடம் பெறுகின்றன. தேசிகரவர்கள் கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பியாக மாறி, பல கருத்துக்களை தேடித் தொகுத்து, தொகுத்தனவற்றை முறைப்படி வகுத்து, நிரல்பட மொழிந்திருக்கிறார்கள். அவர்தம் உள்ளொளி விளக்கம் நூலில் நடையிலும் நுதலிய பொருளிலும் இயல்பாக வெளியிடப்படுகின்றன.

சிவசண்முக சிவஞான தேசிகர் அவர்கள் என் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய பெரியவர்; இடையறாத இறை நாட்டமும், தூய தொண்டு மனமும் கொண்டவர். ஆன்மீகத் துறையில் தோய்வும் -ஆய்வும் - உடைய இப்பெரியவரின் நூலுக்கு அணிந்துரை நல்கும் வாய்ப்பு கிட்டியமை யான் பெற்ற பேறே ஆகும். அதுவும் ஆதிசங்கரரின் பிறந்த நாளான இன்று அணிந்துரை எழுத நேர்ந்தது ஒரு தற்செயல் நிகழ்ச்சியே எனினும், அதிலும் ஏதோ ஒரு தெய்வப் பொருத்தம் இருப்பதாகவே என் அடிமனம் உணர்கிறது. “ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே !”

காரியானூர் சுவாமிகள் வாழ்க !

அவர் திருப்புகழ் வளர்க !

அப்பெருஞானியின் வரலாற்றை நூலாக வடித்தளிக்கும் சிவசண்முக சிவஞான தேசிகர் வாழ்க !

தேசிகரின் திருத்தொண்டு வெல்க !

– என்றெல்லாம் வாழ்த்துவதேயன்றி
யான் வேறென்ன எழுதிவிட முடியும் ?

பத்தர் சித்தர் வாழி ! பரி பக்குவர்கள் வாழி ! செங்கோல்
வைத்தவர்கள் வாழி ! குரு வாழி ! பராபரமே !

–தாயுமானார். பராபரக்கண்ணி. 382.

கும்பகோணம் — அன்பன்,

5-5-84 — மா.இராமலிங்கம்.

சிவமயம்

நூலாசிரியரின் பணிந்துரை

"அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

– தாயுமானார்.

திருவருட் கருணையால் மெய்ஞ்ஞான தீப சந்தானங்களாக வாழையடி வாழையென நம் நாட்டில் வந்து கொண்டிருக்கும் திருக்கூட்ட மரபினில் அவதரித்த அருளாளர்கள் பலருள் அத்வைத அருள்ஞானி காரியானூர் திருவார் திரு.நடேச ஞான தேசிக சுவாமிகள் நினைவில் நிற்கத் தக்கவர்கள், அன்னாரின் அருள் வரலாற்றினை சுவாமிகள் சீடர் தவத்திரு ம.கோவிந்தசாமி சுவாமிகள் 1961 ஆம் ஆண்டினில்

"ஆதிதுறை என்னும் காரியானூர்
ஸ்ரீலஸ்ரீ நடேச ஞான தேசிக சுவாமிகள்
சரித்திரச் சுருக்கமும் – தோத்திரத் திரட்டும்"

என்னும் நூலாக (சாந்தியாச்ரம வெளியீடாக) வெளியிட்டு உதவினார்கள். அதனையடுத்து 1964 ஆம் ஆண்டில் சுவாமிகளின்அணுக்கத் தொண்டர் சாது ந.அரங்கசாமி ஐயா அவர்களின் சுய முயற்சியால்.

"ஆதிதுறை என்னும் காரியானூர்
ஸ்ரீ நடேச ஞான தேசிகர் தோத்திரத்திரட்டு"

என்னும் மற்றொரு நூலை வரலாறும்-தோத்திரங்களும் சேர்த்து சற்று விரிவாக வெளியிட்டு உதவினார்கள். இவ்விரண்டு நூல்களையும் இச்சாதுக்கள் இருவரும் தங்களுக்குக் கிடைத்த வரலாற்றுச் செய்திகளையும் தோத்திரங்களையும் சேகரித்து அரும்பாடுபடடு வெளியிட்டதால் தான் ; நாமெல்லாம காரியானூர் சுவாமிகளைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பினை பெற்றுள்ளோம்.

கைம்மாறு கருதாது குரு பணியாகக் கொண்டு இவர்கள் செய்த நற்றொண்டினை நன்றிப் பெருக்குடன் நாம் போற்றிப் புகழக் கடமைப் பட்டவராவோம். இவ்விரண்டு நூல்களும் மறுபதிப்பேயாகாமல் போனதோடு காரியானூர் சுவாமிகளை அறிந்திடும் வாய்ப்பும் இல்லாமல் போனது எனது மனதைப் பெரிதும் வருத்தி வந்தது. வரலாற்றை

மீண்டும் ஞானத்தமிழ் உலகுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும் என்னும் பேரவா எழுந்தது.

இதய வேட்கையின் காரணமாகத் திருவருளையும் குரு கிருபையையும் பிரார்த்தித்து; இதற்கு முன்னர் வெளி வந்திருந்த நூட்கள் இரண்டினையும் ஆதாரமாகக்கொண்டு சுவாமிகளது அவதாரமான சித்திரைப்பட்டி கிராமம் தொடங்கி கோவிலூர் வேதாந்த மடம், திருவண்ணாமலை ஈசான்ய மடம், மேட்டுப்பாளையம் கிளை மடம், காரியானூர் சமாதி ஆலயம் சாந்தியாச்ரமம் ஆகிய வரலாற்றுப் புகழ் பெற்ற இடங்களுக் கெல்லாம் சென்று பார்த்து செய்திகளை சேகரித்தேன்.

மற்றும் சுவாமிகளுடன் சமகாலத்தில் வாழ்ந்திருந்த சாதுக்கள், சீடர்கள், பக்தர்கள் இருப்பிடங்களுக்கும் சென்று அவர்களைக் கண்டு அவர்கள் கொடுத்த தகவல்களையும் குறிப்பெடுத்துக்கொண்டேன். வரலாற்று நாயகரைப் பார்த்துணர்ந்தோ, ஒரளவாவது அணுகிப் பழகியோ இருந்திருந்தால் வரலாறு வரையும் பாங்கு இயல்பாக அமையும்.

சுவாமிகள் இவ்வுலகியல் வாழ்வில் வாழ்ந்திருந்த பொற்காலத்தில் அடியேன் அவர்களைப் பற்றிக் கேள்விப் படும் பேற்றினைக் கூடப்பெறவில்லை என்பதனை வாசகர் கட்குமிக்க மனவேதனையுடன் குறிப்பிடுகிறேன். பார்த்துப் பழகியிருக்கும் பெரும் பேறு கிட்டியிருக்குமானால் இவ்வரலாற்றை சுயானுபவத்துடன் சிறப்பாக அமைத்திருக்க இயலும்.

இந்நூலை யான் எழுதப் புகுந்தது சற்று தகுதி மீறிய செயலாகும். குருபக்தி காரணமாக எழுதிய இந்நூலில் குறைகள் இருந்தால் அதனைப் பெருட்படுத்தாது; சுவாமிகளின் வரலாற்றை அறிவதில் கவனம் கொள்ளக்கேட்டுக்கொள்ளுகிறேன். காகித விலை ஏற்றம், அச்சுக்கூலி காரணமாக மிகுந்த பொருட்செலவுடன் பெரும் பிரயாசையோடு நூல் வெளி வந்துள்ளது. நூலின் விலையைக் கருதாது அன்பர்கள் வாங்கிப் படித்துப் பலருக்கும் சுவாமிகளின் வரலாற்றை அறிந்திடச் செய்திட வேண்டுகிறேன்.

அடியேனிடம் அன்பு மிகவுடைய சுவாமிகளின் அணுக்கத் தொண்டர் சாது ந. அரங்கசாமி ஐயா அவர்கள்

முன் வெளிவந்த நூல்கள் இரண்டினையும் தந்துதவி காணுந்தோறும் சுவாமிகளின் பெருமையை ஆர்வமுடன் சொல்லி; என்னையும் குருபக்தியுடையவனாகச் செய்து முன் வெளிவராத குறிப்புகளையும் தோத்திரங்களையும், திருவுருவப் படங்களையும், சுவாமிகள் திருவடிபெற்ற பாதக்குறடுகளையும் கொடுத்துதவி இவ்வரலாற்றை யான் எழுதி முடிக்கத் தூண்டுகோளாக விளங்கினார். குருபக்தி மிக்க இச்சாதுவை யான் என்றென்றும் மறக்கற்பாலதோ. இதய நன்றி உரியது.

தவத்திரு. ம. கோவிந்தசாமி சுவாமிகள்என்னிடம் பேரன்பு பூண்டு சுவாமிகளிடம் தான் கண்ட அனுபவங்களை நேரிலும் தபால் மூலமும் தெரிவித்துப் புதிய குரு தோத்திரங்களையும் வரைந்துதவி ஊக்குவித்து நூல் நன்கு வெளிவர நல்லாசியும் நல்கியுள்ளனர். அன்னாருக்கு எனது வணக்கங்களும் நன்றியும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சைவ சித்தாந்தக் கழக வித்வானும் பன்னூலாசிரியருமாகிய கருப்புக்கிளர் சிவத்திரு. சு.அ.இராமசாமிப் புலவர் அவர்கள் பாராட்டுரை நல்கி உள்ளனர். சிவபதம் பெற்ற அன்னாரது ஆன்மா இந்நூல் வெளி வருவதன் மூலம் சாந்தியுறப் பிரார்த்திக்கிறேன்.

எனது பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய திருக்குடந்தை அரசினர் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமாகிய திருமிகு டாக்டர் மா. இராமலிங்கனார் எம்.ஏ., பி.எச்.டி., (எழில் முதல்வன்) அவர்கள் கல்விக்கடல் ஆவார்கள். பன்னூலாசிரியராகிய அவர்கட்கு "புதிய உரைநடை" என்னும் நூலுக்காக இந்தியப் பேரரசின் 1981 ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாடமி விருதும் "விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச்சிறுகதைகள்" என்னும் நூலுக்காக 1981 இல் தமிழக அரசின்பரிசும்பெற்ற பேரறிவாளர் ஆவார். அன்னார் மனமுவந்து அடியேனது வேண்டுகோட்கிணங்க அரியதொரு அணிந்துரை அளித்து நூலை மேலும் சிறப்பித் துள்ளார்கள். அவர்களுக்கு எனது பணிவான நன்றி.

இந்நூல் வெளிவர பல்வகையாலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எனது நன்றியினையும் அன்பையும் தெரிவிக்கிறேன். சற்குரு திருவடிகள் சரணம்.

குப்பான்குளம் பணிவுள்ள,
கும்பகோணம் ம.சந்தானம்.

உ

ஓம் தத் ஸத்

திருச்சி மாவட்டம் - பெரம்பலூர் வட்டம் காரியானூர்
சாந்தியாச்சரமத்தில் திருக்கோவில் கொண்டுள்ள
பரப்பிரம்ம ஞான சத்குரு.



திருவண்ணாமலை ஈசானிய மடம் 8-வது பீடாதிபதி

பார்க்கவகுல ஞான பானு

திருவார் திரு. நடேச ஞான தேசிக சுவாமிகள்.

திருஅவதாரம்,
28-9-1898

திருவருட்பேறு,
25-2-1960

உ

ஓம் பரப்பிரம்மணே நம:

ஆதித்துறை என்னும் காரியானூர்

ஸ்ரீலஸ்ரீ - நடேச ஞான தேசிக சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கமும் - தோத்திரங்களும்.

காப்பு.

ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை யுன்னாடு.

காப்பு வெண்பா.

சீர்வளரும் யானை முகத் தேவே வுனைப்பணிந்தேன்
கார்வளரும் காரியா னூரிலுள - பேர்கொள்
நடேச முனிவரனை நாளுந் துதிக்கத்
தடாது மகிழ்ந்துவரந் தா.

-வாணியம்பாடி ஸ்ரீ ம.கோவிந்தசாமி.

ஆதித்துறை என்னும் காரியானூர் பஞ்சமூர்த்திகள் துதி.

பதினான்கு சீராசிரிய விருத்தம்.

கஞ்சமலர் வாவிவயல் மஞ்சுதவழ் சோலைசெறி
காரியா னூரி னொருபால்
கந்தமுறு மாரமகில் சிந்துரக் கோடுமணி
கரையினெறி திரைமு ழங்கி
விஞ்சமுத வாரியென நீரம்வரு வெள்ளாற்று
மேதகு முதற்றுறை மிசை
மிளிர்சினக ரந்தங்கி யொளிர்குஞ்ச ரானன
விநாயக முதற்க டவுளைச்
செஞ்சரவ ணப்பொய்கை வந்தகுக னைப்பெரிய
தேவர்தந் தேவனென்னும்
சிவமான தாந்தோன்றி அப்பனைத் தேங்கருணை
செய்பெரிய நாயகி மறைப்
பஞ்சர மிருந்துவளர் பைங்கிளியை அன்பர்தம்
பவரோகம் நீக்க வந்த
பரமசஞ் சீவியை நடேசகுரு மூர்த்தியைப்
பரவிநா ளும்ப ணிகுவாம்.

- கோவிலூர் ஸ்ரீ சோமசுந்தர ஐயா.

கடவுள் வணக்கம்.

உலகமுதற் பொருளையும்பர்க் குணர்வரிதாம் பொருளை
யோதிய வேதாகமத்தி னுச்சியினுட் பொருளைப்

பல கலையின் பொருண் முடிவின் முடிவான பொருளைப்
பற்றறப் பற்றிய பெரியோர் பரவிய வான்பொருளை

யலை திவலைநுரை கடலினுதித் தொடுங்குமா போ
லகிலாண்ட

முதித்தொடுங்கு மதன் மூலப் பொருளை

யிலகிய சற்குருவாகி யானாகும் பொருளை
யெங்குமாம் பரம்பொருளை யாமும் வணங்குதுமே

– ஸ்ரீ தெய்வநாயக சுவாமிகள்

குருவணக்கம்.

இருவிழிகள் உலகறிந்தும் தனையறியா ததுபோல்
இயானறியும் பொருளலதிங் கெனையறியா மையினால்
கருவிடைபுக் கின்பதுன்பக் கடலிடையே சுழன்று
கண்கலக்கப் படுவேனைக் கருணைவிழி யுதனால்
அருவினைகள் அறநோக்கி ஆணவமே போக்கி
அகமகமென் றிருந்தவெலாம் அறிவுகொடே நீக்கிப்
பருவமதிற் பதந்தாக்கிக் கற்பனைகள் இயாவும்
பாழாக்கித் தானாக்கும் பரகுருவைப் பணிவாம்.

– ஸ்ரீதெய்வநாயக சுவாமிகள்.

ஆலமலர் செல்வர் துதி.

மோனநிலை அமர்ந்திட்டே மும்மலத்தின் கட்டவிழ்த்து
முத்திக்கு வித்தாகும் மூலகுரு மூர்த்தியதாய்
தேனமுதப் பொருளாகி தென்முகமாய்த் தானமர்ந்து
தெவிட்டாத சின்மயத்தை தெளிவாக்கும்
தெள்ளியனாய்

ஆனந்த நிலையாக ஆலின்கீழ் அமர்ந்தங்கே
அறமதனை நால்வருக்கும் அறிவிக்கும் ஐயனாகித்

தானவனாய் ஆக்கிடுமோர் தற்பரமே தானாகும்
தட்சிணா மூர்த்தியின் தாள்பணிந்து
சிரமேற்கொள்வாம்.

திருவாவடுதுறை ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள் துதி

முத்துக்கக் கடல் கடத்தும் புணையதாகி
மோனமெலாங் கடந்தபர மோனமாகி
எத்திக்கும் நிறைந்தபரி பூர்ணமாகி
யிகபரமா முலகனைத்து மெழுதற்காண
வித்துக்குள் வித்தாகிப் பரமாய்ச் சுத்த
வெளியாகி வன்மீக புரத்தின் மேவிச்
சத்துச்சித்தானந்த மயமாய் நிற்குந்தட்சிணா
மூர்த்திபதந் தலைமேற் கொள்வாம்.

கோவிலூர் ஸ்ரீ மூவாசிரியர்கள் துதி

உகந்த தேசிக னெண்டனிப் பதத்தையிவ் வுலகை
யிகந்த முத்திரா மப்பெய ரிறைமல ரடியைச்
சகந்த னாதெனுஞ் சிதம்பர தேவனற்றாளை
அகந்தை தீரவெம் மகத்தினுஞ் சிரத்தினு மணிவாம்.

திருவண்ணாமலை ஸ்ரீ ஈசானிய ஞானதேசிக சுவாமிகள் துதி

மறைமுடி வதனில் விளங்கிடு மொளியே
மான்மழு வரதமோ டபயங்
கறைமிட றெடுமுக் கண்ணுநாற் புயமுங்
கரந்துமா னுடவுருக் கொண்டே
யுறைதரு முண்மை யுணர்வினை யுணர்த்தி
யுயர்புலி யேவல்கேட் டிருப்பச்
சிறைதவி ரருணை வாழுமீ சான
தேசிக னிணையடி பணிவாம்.

ஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் துதி

கரும்பினு மினிய கனிரசங் கலந்த
கற்கண்டி னமுதவாய் மொழியும்
விரும்பிய வடியர் வினையையே றறுக்கும்
வித்தையும் ஞானமும் விளம்பும்
அரும்பிணி யகற்று மருள்வடி வாகி
அமர்ந்திடு மாதிமா தேவன்
அரும்பிரகாச னருட்பெருங் கழல்கள்
அகத்தினுஞ் சிரத்தினு மணிவாம்.

ஸ்ரீ நடேச ஞானதேசிக சுவாமிகள் துதி.

சீர்கொண்ட முனிவர்களின்மரபதனில் வந்த
சிருங்ககிரிச் சங்கரனார் பரம்பரையைச் சேர்ந்த
பார்கொண்ட புகழ்முத்தி ராமலிங்க முனிவன்
பண்புடனே அமைத்ததிருக் கோவிலூர் மடத்தில்
பேர்கொண்ட புகழேழாம் மடாதிபதி யாகிப் .
பிறங்குமகா தேவகுரு முதற்சீட ராகும்
நார்கொண்ட அலங்கலணி நடேசமா குருவின்
நறைமலர்க ளணிபதங்கள் நந்தலைமேல்
வைப்பாம்.

சீராருந் திருவருணைத் தலத்தில் நன்கு
திகழ்ந்திடும்ஈ சானியநல் மடத்த மர்ந்து
பேராருந் தலைவனென அடியார் போற்றப்
பெரிதருளைப் புரிந்தவர்க்குப் பேணுந் தூய
நீராரும் மறைமுடிவுப் பொருளை நாளும்
நேர்மையுடன் உரைத்திருந்த நிமல ஞான
ஏராரும் நடேசகுரு நாதன் தாளை
என்றுமுளங் கொண்டுமிகப் பணிகுவோமே.

குரு மரபுவழி துதிகள் முற்றும்.

உ

ஓம்

தத். சத்.

ஓம் பரப்பிரம்மணே நம :

ஆதிதுறை என்னும் காரியானூர்

திருவார் திரு

நடேச ஞானதேசிக சுவாமிகளின் வரலாற்றுச்சுருக்கமும், தோத்திரங்களும்.

"ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்கல் ஆமோ ?
ஞானகுரு புகழினை நாம் வகுக்கல் ஆமோ ?
வாயினாற் சொல்லிடவு மடங்கா தப்பா,
வரிசையுட னெழுதி வைக்க வகையுமில்லை ;
ஐயனவன் லெழுதிடினும் முடிவுறாதாம் ;
ஐயனவன் பெருமையை யான் சுருக்கிச் சொல்வேன்."

–பாரதி அறுபத்தாறு.

நாடும் ஊரும் மரபு வழியும்.

திருவருள் மிகுந்த இறைவனது அருளாட்சியுற்று விளங்கும், கடல் புடை சூழ்ந்த நெடுநில வுலகிலே, தெய்வ ஆலயங்களும், தெய்வங் கொள்கையிற் சிறந்த சான்றோர்களும், சாத்திரங்களும் நிறைந்து, தெய்வீக அருட்பொலிவுடன் விளங்குவது இந்திய நாடு. இத்தகைய பெருமை பொருந்திய இந்திய நாட்டின் தென் பகுதி செந்தமிழ் நாடு. இவ்வின்பச் செந்தமிழ் நாட்டின் மையப் பகுதியிலுள்ளது திரிசிரபுரம் என்னும் திருச்சிராப்பள்ளி யாகும்.

இத்திருச்சி மாவட்டத்தைச் சார்ந்த துறையூருக்கு அண்மையில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில், முசிறி செல்லும் சாலைப்பிரிவில் உள்ளது 'மதுரபுரி' என்னும் சித்திரைப் பட்டிக்கிராமம்.

இவ்வூரிலே, திருக்கோவிலூரை யாண்ட தெய்வீக ராசனது பார்கவ குலத்தில், குகமுனி கோத்திர மரபு வழியில், வள்ளுவரும் வாசுகியும் போன்று வாழ்ந்திருந்த சத்திய சீல நற்குணம் வாய்ந்த திருமிகு. சபாபதி உடையாருக்கும், அவர்தம் கற்பிற் சிறந்த துணைவியார் திருமிகு. விசாலாட்சி அம்மையாருக்கும், தலை மகவாய் சுவாமிகள் தவத்திரு. தாயுமானாரின் திரு அவதாரமெனத் தோன்றினார்கள்.

அவதார காலமும், நேரமும், சோதிடக்குறிப்பும்

சுப கலியுகாதி - 4999 - சாலிவாகனம் - 1820, ஆங்கிலம் 28-9-1898 க்குச் சரியான பிரபவாதி விளம்பி ஆண்டு, புரட்டாசி மாதம் 14 ம் நாள், புதன்கிழமை, தக்ஷணாயனம், வருடருது, கார்காலம், சுட்கிலத் திரயோதசி-3-45, சதுர்த்தசி-56-10, சதயம்-10-53, (முதல் நாள் அவிட்டம்-13-31, மறுநாள் பூரட்டாதி 9-5) சூலம்-0-53, கண்டம்-54-7 தைதுலை-3-45, கெர-28-5, திவி 26-21க்குமேல், அமுத கடிகை அகசு29-52, இவை கூடிய நன்னாளில் பகல் 2 மணி-42 நிமிடம் அளவில் 21-நாழி 45-விநாடி சுமாருக்குப் பூரட்டாதி நட்சத்திரத்தின் முதலாவது பாதத்தில் சுவாமிகள் அவதரித்தனர்.

மாதாவின் கர்ப்பச் செல்போக வந்த குரு மகர தசாவில் இருப்பு : 13வரு 0மா. 5நாள்

நவ கோள்கள் நின்ற நிலை

			செவ் கேது
சந்	இராசி		
ல			
ராகு	சனி	சுக்	புதன் சூரி குரு

செவ்	ல சூரி சந கேது		சுக்
	அம்சம்		
புதன்			குரு
		சனி ராகு	

நவக்கிரக பாத சார விபரம்

திருவோணம்	1ல்	லக்கினம்
அஸ்தம்	1ல்	சூரியன்
பூரட்டாதி	1ல்	சந்திரன்
திருவாதிரை	4ல்	செவ்வாய்
உத்திரம்	2ல்	புதன்
சித்திரை	1ல்	குரு
விசாகம்	3ல்	சுக்கிரன்
அனுசம்	3ல்	சனி
பூராடம்	3ல்	ராகு
புனர்பூசம்	1ல்	கேது

சுபம்.

குறிப்பு : இச்சோதிடக் கணிதம் 28ம் நீர் வாக்கிய பஞ்சாங்க வழியில் குறிக்கப்பட்டுள்ளது. சோதிடக்குறிப்பு. காரியானூரில் கிடைத்தது. ஸ்ரீ காக புகண்டர் நாடி சாஸ்திரத்தில் சுவாமிகளுக்கு 500 பாடல்கள் உள்ளன.

திருநாமம் சூட்டலும், கல்வி பயிலலும்.

பெருந்தவமிருந்து ஈன்றெடுத்த பெற்றோர்கள் சுவாமிகளுக்கு 'நடேசன்' என்னும் திருப்பெயரளித்துக்

கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தனர் பிள்ளைப் பிராயத்திலேயே அறிவு, அமைதி, ஊக்கம், பக்தி முதலிய நற்குணங்கள் ஒருங்கே வாய்க்கப் பெற்று, வளர்மதிபோல வளர்ந்து, வயதும் ஐந்து நிரம்பியவுடன், 'ஐயாண்டவிலே மையேடு கைப்பிடி' என்னும் முதுமொழிக் கிணங்கக் கல்வி கற்கத் தொடங்கினார்.

அக்காலத்துத் திண்ணைப் பள்ளி ஒன்றில், வீரசைவப் பெரியாராகிய சோமசுந்தர ஐயரென்ற ஆசிரியப் பெருந்தகையிடம், பண்டைக்காலத்துப் பழக்கப்படி, நெடுங்கணக்கிலிருந்து நீதிநூல்கள், சதகங்கள், புராண இதிகாசங்கள் முதலியனவற்றை ம்றையாக நன்கு பயின்றார்.

இரவில் நீண்ட நேரம் இல்லத்திலிருந்து படித்தால், அதனால் இதரர்களது உறக்கத்திற்கு இடையூராக இருக்கக் கூடுமெனக் கருதித் தெருவிளக்கின் வெளிச்சத்தில் ஊக்கமாய் படித்தனர். தமது பதினான்கு வயதுக்குள் கல்வியில் முழுமையான தேர்வு பெற்றுப் பள்ளிப்படிப்பை முடித்தனர்.

இறையருள் நாட்டமும் - இதய வேட்கையும்

ஈராண்டு காலம் இல்லக் கடமைகளாற்றினர். எனினும், முற்பிறப்பின் தவ வலிமையால், உள்ளம் இறையருள் வழியையே நாடலாயிற்று. இக வாழ்வில் வெறுப்பும்-அக வாழ்வில் விருப்பும் இயல்பாக ஏற்படலாயின.

"தினமே செலச்செல வாழ்நாளும் நீங்கச் செகத்திருள் சொற்
பனமே யெனவெளி கண்டேயிருக்கவும் பாசபந்த
இனமே துணையென் றிருந்தோம் நமன்வரின் என் செய்குவோம்
மனமே நம்போல வுண்டோ சுத்தமூடரிவ் வையத்தே."

எனத் தாயுமான சுவாமிகள் பாடியுள்ளபடி ஏனையோரைப் போலத் தாமும் இவ்வுலகியல் வாழ்விலீடு பட்டுப் பிறவி

எடுத்ததின் பெரும் பயனைப் பெறக் கருதாமல் அவமே வாணாளை - வீணாளாக்காது தவமே குறிக்கோளாகக் கொண்டு நிர்குணமறிந்த- சற்குருவையடைந்து, வீடு பேற்றினை பெற்றிடல் வேண்டுமென எண்ணினார்.

திருவாசக உருக்கமும், மருவாழ்வுத் திருப்பமும்.

இல்லக் கடமைகளையாற்றி வரும்போது, நடேசனாரின் வாழ்வில் ஓர் திருப்புமுனை சம்பவம் ஏற்பட்டது. வழக்கம்போல் பசுக்களை, மேய்க்கப் பசும்புல்வெளி மந்தைக்கு ஓட்டிச் சென்றார். மாடுகளை மேய விட்டு விட்டு, தம் ஈடுபாட்டைத் திருவாசக ஏடுகளைக் காண்பதில் கொண்டார். 'திருவாசகத்துக்கு உருகாதார் மனம், ஒருவாசகத்துக்கும் உருகாது' என்றவாறு அதிலேயே மனந்தோய்ந்து விட்டது.

மேய்ந்துகொண்டிருந்த ஆவினங்கள், பக்கத்திலிருந்த பயிர்க்கொல்லைகளில் பாய்ந்து, நன்கு மேய்ந்து சேதம் விளைவித்தன. பயிர்ச்சேதம் அடைந்தவர்கள், நடேசனாரின் பொறுப்புக்குறைவைச் சுட்டிக்காட்டி, அதனால் அவர்களுக்குகேற்பட்ட பயிர் சேதத்தையும், பெற்றோர்களிடம் முறையிட்டனர். தந்தையார் மைந்தரை சிறிது சினந்து கண்டித்தார்.

தனது தவறையுணர்ந்த நடேசனர், பயிர்ச்சேதம் அடைந்தவர்களிடம் வருத்தம் தெரிவித்துக்கொண்டு, நடத்ததைச் சொல்லி கோபமடைந்திருந்த தகப்பனாரைச் சமாதானப் படுத்தினர். இச்சம்பவம் முன்பே இல்லந்துறந்து விடத் திட்டமிட்டிருந்த நடேசனாருக்குத் தூண்டு கோலாகவும், ஒரு சந்தர்ப்பத்தைக் காரணமாகவும் அமையலாயிற்று.

இல்லம் துறத்தலும் உறுதி மொழியும்

ஸ்ரீ ரமண முனிவர் தமது17-ம் வயதில் இல்லந் துறந்து, அண்ணாமலையயடைந்தது போலவே, நம்

நடேசனாரும் தமது 16-ம் அகவையில் 1914-ம் ஆண்டில், அதி தீவிர வைராக்கிய சீலராக இல்லந் துறந்தார். நடேசனார் இல்லந்துறந்து செல்லும் பொழுது கடுமையான சங்கற்பத்தையும் மனதில் ஏற்றுக் கொண்டார்.

இனிப் பிறந்த இல்லந்திரும்புவதில்லை. இப்பிறவி முடியும் வரை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னசை என்னும் மூவாசைகளையும் முற்றுந்துறந்து விடுவதென விரதம் பூண்டார். தமக்கெனத் தமது இல்லத்திலிருந்து எதனையும் எடுத்துக் கொள்ளாமலும், எவருக்கும் எதுவும் இயம்பாமலும், திருவருள் தமது திருவுள்ளத்தில் உயர்த்தியபடி திருவண்ணாமலையை நோக்கிக் கால் நடையாகவே சென்றார். கையில் பாத்திரமும் இல்லாததால், பசி நேர்ந்த போது கரபாத்திர பிட்சையாகவே ஏற்றுப் பசி தவிர்த்தார். மாற்றுடையும், மறை நூல்களுமே அவரது கைவசம் இருந்தன.

திருவண்ணாமலையின் திருவருட்பெருமை

" உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணித் திகழ
மண்ணார்ந்தன உருவத்திரண் மழலைமுழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ண மறுமே.
– திருஞான சம்பந்தர்.

திருவண்ணாமலைத் திருத்தலத்திற்கு 'ஞான நகரம் என்றதொரு சிறப்புப் பெயரும் உண்டு. பரந்து விரிந்த இப்பாருலகினையே ஒரு தெய்வ ஆலயமாகக் கருதுவோமேயானால், திருவண்ணாமலைத் தலத்தினை அதன் மூலத்தானமாகக் கொள்ளலாம். அருணாசலமலையே அக்கருவறையிலுள்ள சிவலிங்கமான கடவுளாகும். 'கைலாயமோ' சிவபெருமானின் இருப்பிடம். ஆனால் 'அருணாச்சலமோ' சிவ சொரூபம். அதனால் தான் மலையின் சிகரத்தில் கோயில் இல்லை.

சிவபெருமானுக்கே ஆசை கொள்ளும்படி திரு வருணாசலத்தலம் அமைந்த பிறகு திருக்கயிலை மலையிலிருக்கும் ஆசை வெறுத்தது; ஏன்? இம்மலையே பொன்னுருவங் கொள்ளுமாயின் வெள்ளிமலை மேல் ஆசை உண்டாகுமோ !

"ஆசை தருந் திருவருணை சமைத்த தற்பின்
கயிலை மலையாசை போயிற்
றீசனுக்குங் கனகமலை யிதுவாயின்
வெள்ளிமலை யினிமே லென்னாம் ! ...

என்கிறது : திருமலைச் சருக்கப்பாடல் –87

முழு முதற் கடவுளான பரமசிவனே அண்ணாமலை யாராக அமர்ந்து அடிமுடி காணத் தேட அயர்ந்த அயனுக்கும் அரிக்கும் அக்னி மலையாகக் காட்சி தந்து ; உலகு உய்யும் பொருட்டாக அந்த ஞான குருவானவர் ஜோதிர்லிங்க வடிவமாய்த் தரிசனம் தந்து கொண்டிருக்கின்றார்.

"என்னிகர் எவருமில் லென்று இருவரும் இகலும் எல்லை
அன்னவர் நடுவுதோன்றி அடிமுடி தெரியா தாகி
உன்னினர் தங்கட்கெல்லாம் ஒல்லையில் முக்தி நல்கி
தன்னிகரின்றி நின்றது அழற் பெரும் சயிலம்"

– கச்சியப்ப சிவாச்சாரியார்.

மாகேசுரனே மாமலையாக வீற்றிருப்பதனால் தான் ; அருணாசலத்தைக் கிரிவலம் வருவது பிறவி எடுத்ததன் பெரும் பயனாகக் கருதப்படுகின்றது. இம்மலையை ஒரு முறை சுற்றி வருவதின் பயன் பிறவிப் பெருங்கடலைக் கடக்குந் தோணியாகவும், ஏழு நரகங்களையும் கடந்தேறி முக்தியடையும், ஏணியாகவும் ஆகுமென அருணாசலத்தல புராணம் புகல்கின்றது. புனித நாட்களில் மலை வலம் வருவது சிறப்பு மிக்க பயனைத்தர வல்லது.

*"சக்திக்கு ஒருபாகம் தான் கொடுத்து நின்ற மலை
முத்திக்கு வித்தாய் முளைத்த மலை - எத்திசையும்
போற்று மலை போற்றிப் புகழ்வார் 'எழு' பிறப்பை
மாற்று மலை அண்ணாமலை."*

அண்ணாமலை வெண்பா : குரு நமச்சியவாயர்.

இனி தூலமாகத் தோன்றும் திருவண்ணாமலையை நோக்குவாம். இதற்கு அருணாத்ரி, சோணாசலம், சிவலோகம், சுத்த நகரம் முதலிய காரணப் பெயர்களும் உள்ளன. கர்ம குணங்களை தீர்கக வல்லதாதலால் இதற்கு அருணகிரி எனப் பெயர் வந்தது. இதன் தென்ப் பாகத்தில் தென்பெண்ணை நதியும், வடப்பாகத்தில் செய்யாறும், இடையில் கமல நதியும் முறையே இடை, பிங்கலை, சுழிமுனை நாடிகள் போலச் செல்கின்றன.

திருவண்ணாமலை பஞ்சபூதத் தலங்களில் ஒன்றான அக்னித்தலமாகும். இங்கு சிவபெருமான் தேஜோ மயமாக விளங்குகின்றார். இத்தலம் திருக்கார்த்திகை தீப தரிசன திருத்தலமாகவும், மலை எட்டு கோணங்களாக அட்ட மூர்த்த வடிவமாகவும், அட்டதிக்கு பாலகர்களின் ஆலயங்களின் காப்பாகவும், ஐந்து முகங்கள் போன்று பஞ்சமுகக் குன்றுகளாகவும், சுயம்புவாகவும் விளங்குகின்றது. இப்புனித தலத்தைப் புராணங்களும், திருமுறைகளும் போற்றிப் புகழ்கின்றன.

*"ஒளியில் விளைந்து உயர்ஞான பூதரத்துச்சியின் மேல்
அளியில் விளைந்த தோர் ஆனந்தத் தேனே"*

என்கிறார் அருணகிரியார்.

முக்திக்கு வழியும், தத்துவ விளக்கமும் :

*"தில்லையை காணக் காசியி லிறக்கச் சிறக்கு மாரூர்தனில் பிறக்க.
வெல்லையில் பெருமை யருணையை நினைக்க வெய்தலா முக்தி"*

பாடல்--அருணாசல புராண திருநகரச் சுருக்கம்(45)

தில்லையைத் தரிசிக்க முக்தி, காசியில் இறக்க முக்தி, திருவாரூரில் பிறக்கமுக்தி, அருணையை நினைக்க முக்தியாம். மூன்மூன்று நிலைகளும் முயன்று அடையத்தக்கன. ஆனால் எவரும் எங்கிருந்தும் அருணையை நினைத்தாலும் முக்தியைப் பெறுவாரென்பது மறைமொழி.

"தர்சனாத பரஸதஸி ஜனானாத் கமலாலயே
காச்யாந்து மரணான் முக்தி : ஸ்ரமணா தருணாசலே".

சொரூபமானது மனோவாக்குக் காயங்களுக்கு அப்பாற்பட்டது. புத்திக்கும் எட்டாதது. 'நான்' என்னும் அகங்காரமுற்று 'நான்' காண்பேன் என்று முயன்றாலும் காணப் பெறாதது. புத்திக்கும் அகங்காரத்திற்கும் அதிட்டான மானதாகவும், அவைகட்கும் அப்பாற் பட்டதாகவும். இதயத்தில் சுயமாகப் பிரகாசிப்பதுவே அண்ணாமலையின் தத்துவம்.

"புத்தியகங் காரம் புலம்பெய்த வோங்கு
மத்தியித யந்தான் மறையவனு மாலு
நத்தவறி யாது நலங்குலைய வன்னார்
மத்தியொளி ரண்ணா மலையினது மெய்யே"

–முகவைக் கண்ணமுருகனார் பாடல்.

'நான் தானித்தவுடல் என்னும் தேகாத்ம பத்தியை விட்டு இதயத்திலே பொருந்தி உண்முகப் பார்வையாக அங்கு இரண்டற்ற ஏக வஸ்துவாக ஒளிரும் சுடரை உணர்ந்து நிற்றலே பூமத்திய தலமாகிய அண்ணாமலை மீதுள்ள தீப தரிசனமாகும்.

" இத்தனுவே நானுமெனு மதியை நீத்தப்
புத்தியித யத்தே பொருந்தியக நோக்கா
லத்துவித மாமெய் யகச்சுடர் காண் கை பூ
மத்தியெனு மண்ணாமலைச் சுடர்கான் மெய்யே".

ஸ்ரீ ரமண முனிவர் பாடல்

உயர்ந்த அத்துவைத பாவனையையடைய அகத்தும் புறத்தும் ஒரே நோக்கு எழும் படியாக இறைவனையும் அவனை அடையும் வழியினையும் எங்கும் உணரும் வகையில் அமைத்தனர் ஆன்றோர்.

ஞானத் தபோதனரை வரவேற்கும் மலை.

"கருவண்ணா நிலையை அளிக்க வல்லது திருவண்ணாமலை" மெய்ஞ்ஞானத்தைப் பெற விரும்புவோரை 'வா' வென்றழைத்து வீடு பேற்றைத் தர வல்லது. இதனைக் கருதியே குரு நமச்சிவாய சுவாமிகள் தாம் பாடிய அண்ணாமலை வெண்பாவில்,

"ஆதிநட மாடுமலை யன்றிருவர் தேடுமலை
சோதிமதி யாடரவஞ் சூடுமலை - நீதி
தழைக்குமலை ஞானத்தபோதனரை 'வா' வென்
றழைக்குமலை யண்ணாமலை".

ஞானத் தபோதனரை 'வா' வென்றழைக்கும் மலை அண்ணாமலை எனப் புகழ்ந்துள்ளனர். அவஞானம் நீங்கித் தவஞானம் பெற, நெடுவழி கடந்து அருணையையடைந்த, நம் நடேசனார் அவர்களையும் 'வா' வென்றழைத்து வரவேற்றது திருவண்ணாமலை.

அண்ணாமலையார் அஞ்சலி
அய்யாச்சாமி ஐயாஆதரவு

'நடேசனார்' அவர்களும் தம்மை அன்புடன் 'வா' வென்று வரவேற்ற அண்ணாமலைக்கு 'அரோ ஹரா' வென வாழ்த்துரை கூறி வணங்கினார். பவ சங்கையை நீக்கும்-சிவகங்கையில் தீர்த்தமாடிக் கிரிவலம் வந்து; ஆலயம் சார்ந்து; உண்ணாமலை உடனாகிய அண்ணாமலையாரின் அடிக் கமலங்களில் அடைக்கலம் போந்து; பயபக்தியுடன் வழிபட்டு வணங்கித் தோத்தரித்து, அண்ணாமலை நாதர் அஞ்சலி பெற்றவராக அகமகிழ்ந்திருந்தார்.

அவ்வமயம், சிவகங்கைத் தீர்த்தக்கரையருகேயுள்ள, ஸ்ரீ சர்வ சித்தி விநாயகர் ஆலயத்தில் தங்கிப், புட்ப கைங்கர்யம் செய்து வதிந்து வந்த சாது, 'அய்யாச்சாமி ஐயா' என்னும் பெரியவர், நடேசனாரைக் கண்டு அன்புடன் அளவளாவி வரவேற்று, உண்டி முதல் வேண்டிய உதவிகளையும் செய்து ஆதரித்து வந்தார்.

நடேசனாரும் அவர்பால் பேரன்பு கொண்டு நண்பராகித் தாமும் துணையாகத் திருமலர்த் தொண்டு புரிந்தவராக, ஆறு மாதகாலம் அவருடன் அமைதியாக, அண்ணாமலையார் ஆலயத்திலேயே தங்கியிருந்தார். நாள்தோறும் நடேசனார் அவர்கள், மூன்று மலர் மாலைகளை புனைந்து, ஸ்ரீ சர்வ சித்தி விநாயகருக்கு ஒருமாலையும், ஸ்ரீ உண்ணாமலை அம்பிகை, ஸ்ரீ அண்ணாமலை நாதர் இருவருக்கும் இரண்டு மாலைகளையும், அணிவித்து அகம் மகிழ்வார்.

குரு பரம்பரையும், வாச விசேடமும்

நினைத்தாலே 'முத்தி' தரும் இவ்வருணையில் மூர்த்தி தலத் தீர்த்தச் சிறப்புகளோடு, சற்குருவின் 'வாசவிசேடச்' சிறப்பும் இருந்து வருகின்றபடியால், அஞ்ஞானத்தைப்போக்கி மெய்ஞானத்தை அருளத்தக்க, தேசிகப் பொருத்தங்கள் அனைத்தும் முழுமையாக நிரம்பப்பெற்று, மற்றெல்லோரிலும் மேலாக விளங்காநிற்கும் குருமூர்த்திகள், அநாதிகாலமாக அருணாசலத்தின் கண், வாழையடி வாழையென வந்த வண்ணம் உள்ளனர்.

அந்நாளில், அருள்ஞான மூர்த்திகளான ஸ்ரீகுகை நமச்சிவாயத் தேவரும், ஸ்ரீகுரு நமச்சிவாயத் தேவரும், தவயோக பீடாதிபதிகளான ஸ்ரீ ஈசானிய ஞான தேசிக சுவாமிகளும், ஸ்ரீ அழகானந்த ஞான தேசிக சுவாமிகளும், செந்தமிழ் சந்தக் குயிலாய், சேந்தனின் கந்தப் புகழைத் திருப்புகழ் பாக்களாகப் பாடியருளிய அருட் குருநாதர் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளும், அவர்கள் தம் திரு அவதாரம் என்ன ஸ்ரீ வண்ணச் சரபம் தண்டபாணி

சுவாமிகளும், தெய்வப்புலவரான சைவ எல்லப்ப நாவலரும், சித்த புருடர்களான விருபாட்சித் தேவரும்-விட்டோபா சுவாமிகளும், பாணி பாத்திரரும், பத்திராசலரும் சிவப்பிரகாச சுவாமிகளும், சடைச் சுவாமிகளும், சற்குரு சுவாமிகளும் மற்றும் பல பெரியோர்களும் அருணையை யடைந்து பெருநிலையைப் பெற்றனர்.

இந்நாளில், நாமறிந்த காவிய கண்ட கணபதி முனிவரும், ஜடினி சண்முக யோகினியும், மகான் சேஷாத்திரி பிரம்மமும், மகரிஷி ரமண முனிவரும் மற்றும் பலப் பல அவதார புருடர்களும், இப்புண்ணிய தலத்தில் வாழ்ந்து-மோனத்தவம் புரிந்து, ஞானப்பேற்றினைப் பெற்று, ஜீவன் முத்தர்களாகவும், ஆன்ம ஞானிகளாகவும் விளங்கி, அறம் செழிக்க அருந்தொண்டாற்றினர். பகவான் ரமண மகரிஷிகளால், அருணாசல மகிமை உலகப்புகழ் பெற்றது. அத்வைத மார்க்கமும்- "அஜாத சித்தாந்தமும்" உயர்ந்தது.

அஜாத சித்தாந்தத் திறன்

(நேரிசை வெண்பா)

அநேகசித் தாந்த மலரவர்க் கேற்பச்
சொனாலுங் குருரமணத் தோன்றல் – தனாது
நிஜானுபவ மாக நிகழ்த்தயாங் கேட்ட
தனாதசித் தாந்த மறி.

(பொ-ரை) (தம்மிடம் வந்து வினவும் மக்கள்)அவரவர் கொள்கைக்கும், நிலைக்கும், பக்குவத்திற்கும் ஏற்ப, சற்குரு பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள் அநேக வித சித்தாந்தங்களை (தீர்ப்புகளை) அவரவர்க்குச் சொல்வதுண்டு, எனினும் அவர்தம் நிஜானுபவமானது அஜாத சித்தாந்தமே என்று அவர் கூற யாம் கேட்டிருக்கின்றோம். ஆகையால் * அஜாதமே சத்தியம் என்று அறிந்து கொள்க.

---

* அஜாதம் முக்காலத்தும் மூவிடத்தும் ஜக ஜீவ ஈசுவரர்கள் என்னும் திரிபதார்த்த தோற்றம் யாதொன்றும் உண்டாகவே இல்லை. உள்ள பொருள் உள்ளபடியே விளங்கிக் கொண்டிருக்கிறது என்ற உண்மை.

"அர்ச்சுனற்குக் கண்ணபிரா னாதிக்கட் சொற்றதூஉம்
உச்சமுறு மிந்தநிலை யின்மையே - அர்ச்சுனன்றன்
சிந்தைகொள மாட்டாத் தியக்கத்தாற் காண்டியதன்
பிந்தி யுரைத்தான் பிற".

(பொ-ரை) முன்பு அர்ச்சுனனுக்குக் கண்ணபிரான் கீதையின் ஆரம்பத்தில் (இரண்டாவது அத்தியாயத்தில்) கூறியதும் உயர்வற வுயர்ந்த இவ்வஜாத சித்தாந்தமேதான். ஆனால் அருச்சுனன் அதைக் கிரகிக்கும் ஆற்றல் அற்றவனாய்த் தடுமாறியதால் தான் ஸ்ரீ கிருஷ்ணன் ஏனைய சித்தாந்தங்களையும் அதன் பிறகு பதினாறு அத்தியாயங்களாக்கி கூற வேண்டி வந்தது என்று கண்டு கொள்க.

மூலம் முருகனார் உரை :சாது ஓம்.

தவயோகி ஸ்ரீ ராம் சுரத்குமார் சுவாமிகள்.

இன்று நாம் கண்கூடாகக் காண, திருவண்ணாமலை தேர்முட்டிச் சந்நதித்தெருவில், சிறு வீட்டில் வாழ்ந்து வரும் வடநாட்டுச் சாது, தவயோகி ஸ்ரீராம்சுரத்குமார் சுவாமிகளைக் குறித்து, 'வாகீச கலா நிதி' திரு. கி.வா.ஜகந்நாதன் அவர்கள் புகழ்ந்து பாடியுள்ளபடி,

"ஞானியர்கள் முன்னாளில் பலரிருந்தார் இந்நாள்
நாம் காண யாருமில்லையென்று சொலல் வேண்டாம்.
மோனமுறும் மெய்ந்நிலையைக் கண்டவர்கள் இங்கே
முழுத்துறவோ டிருக்கின்றாரிறை வனருள் தனக்கும்
ஈனமுறல் உண்டோ?மற் றதற்குமுடி வுண்டோ?
இந்நாளில் ஒருஞானி தனைக்காண வேண்டின்
சானமுறல் வேண்டாம்நல் லருணைதனில் சென்றே
சார் ராம் சுரத்குமார் எனுமவனைக் காண்மின்.

எனத்திருவண்ணாமலையில் இன்றும் வதிந்து வரும் ஸ்ரீ ராம் சுரத்குமார் சுவாமிகள், காசி அருகில் 1-12-1918ல் பிறந்து, கன்னட தேச காஞ்சன் காடு ஆனந்தாஸ்ரமம் சுவாமி ராமதாசிடம் உபதேசம் பெற்றுப் புதுவையில் அரவிந்தரைத் தரிசித்து, ஸ்ரீ ரமண முனிவரிடம் ஈடுபாடு கொண்டு, 1959 ஆம் ஆண்டு

முதலாக திருவண்ணாமலையைத் தேடிவந்த மகான்களில் ஒருவராக விளங்கி, அனைவருக்கும் அருளாசி நல்கி ஆனந்த மேலீட்டில் இருந்து மகாசமாதி பெற்றுள்ளார். இவர் போன்ற பல பெரியோர்கள் இன்றும் இங்கெழுந்தருளி ஜீவன் முக்தர்களாக விளங்கி வருகின்றனர்.

ஸ்ரீ ராம் சுரத் குமார் சுவாமிகள் திருவண்ணமலையில் 26-11-1980 ல் இந்நூலாசிரியனாகிய அடியேன் மூலம் இவ்வரலாற்றினை முழுவதும் நேரில் படிக்கக் கேட்டின்புற்றார்கள். இந்நூல், விரைவில் புத்தக வடிவில் வெளிவர அருளாசியும் அருளினார்கள்.

சாது சங்கமமும் - சற்குரு தரிசனமும்.

திருவண்ணாமலை ஈசானிய மடத்தைச் சேர்ந்த சாதுக்கள், அண்ணாமலையார் ஆலயத்திற்குத் தரிசனார்த்தமாக.ச் சென்று வரும்போது, நடேசனாரின் நற்குண, நற்செயல்களையும், எப்போதும் ஆழ்ந்த பரமாத்ம சிந்தனையில் இருந்து வருவதையுங் கண்டு, அறிமுகமாகி அளவளாவி, வருங்காலத்தில் இவர் முன்னுக்கு வந்து சிறப்படையக் கூடிய பக்குவ மூர்த்தியென உணர்ந்து, அவர்களுக்கேற்பட்ட ஆன்ம நேய அருள்விருப்பால், நடேசனாரைத் தமது ஆசிரியப் பெருந்தகையிடம் சேர்ப்பிக்க எண்ணி, அய்யாச்சாமி ஐயாவின் அனுமதியுடனும், நடேசனாரின் சம்மதியுடனும், ஈசானிய மடத்திற்கு அழைத்து வந்து, தங்கள் குருநாதரிடம் சேர்ப்பித்து, அறிமுகம் செய்து வைத்தனர்.

"பந்தமெலாந் திரப் பரஞ்சோதி நீகுருவாய்
வந்தவடிவை மறவேன் பராபரமே."

அவ்வமயம், ஈசானிய மடத்திற்கு தலைமை பூண்டு அடியார்கட்கு அன்னை போன்ற அன்பும், இன்சொல்லும், மலர்ந்த முகமும், அருட் கண்ணோக்கமும் உடையவராக நாள்தோறும் வேதாந்த சாத்திரப் பாடங்களைத் தமது சீடர்களுக்கு விருப்புடன், போதித்து வருகின்ற

ஞான வள்ளலாக விளங்கியவர் ஏழாம் குருமூர்த்தியாகிய ஸ்ரீ மகாதேவ ஞான தேசிக சுவாமிகளாவார்.

தம்மிடம் அழைத்து வரப்பெற்ற 'நடேசனாரின்' உருவத்தோற்றத்தையும், உள்ளப் பண்புகளையும், சிறந்த செய்கைகளையும், நிறைந்த மனவடக்கத் தன்மையினையுங் கண்ட, ஸ்ரீ மகாதேவ ஞான தேசிக சுவாமிகள் உளம் மகிழ்ந்து; அன்று விவேகானந்தரைக் கண்ட ராமகிருஷ்ணரைப் போலப் பரவசமுற்று; வருங்காலத்தில் இவர் மிக உன்னத நிலையினை யடைவாரெனத் தமது திருவுள்ளத்தில் எண்ணியவராக, மகிழ்ந்து ஆசீர்வதித்து அன்புடன் சீடராக ஏற்றருளினார்.

சற்குரு சேவையும், வேதாந்தம் பயிலலும்,

"மூர்த்தித்தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தை சொல்லச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே".

என்னுந் தாயுமானார் திருவாக்கிற்கேற்பத் தாம் விரும்பியவாறு, பேரானந்த முற்ற நடேசனார் அவர்கள்; அன்று 'கமலை' ஞானப்பிரகாசரைக் கண்ட 'தருமை' குருஞான சம்பந்தரைப்போல, சற்குரு மூர்த்தியிடம் * ஆப்தம் அங்கம், தானம், சத்பாவம் என்னும் நால் வகைத் தொண்டிலும் சிறந்து விளங்கினார். குருநாதரின் குறையாத அன்பிற்கும், உடன் பிறவாச் சாதுக்களின் மறவாத நட்பிற்கும் உரியவரானார்.

ஸ்ரீ மகாதேவ ஞான தேசிக சுவாமிகள் தமது அடிய வர்கள் திருக்கூட்டத்தோடு, புதிய சீடர் நடேசனாரையும் சேர்த்து, நாள்தோறும் கோவிலூர் மடாலயப் பரம்பரை முறைப்படி, வேதாந்த சாத்திரப் பாடங்களான, நானா சீவ வாதக்கட்டளை முதலாக - ஞான வாசிட்டம் முடிவாகவுள்ள, * பதினாறு ஞான சாத்திரங்களையும் முறையாகப் போதித்து வந்தார்கள். நடேசனாரும் நுண்ணறிவும், நினைவாற்றலும் மிக்கவர்களா தலால், மிகச் சிறப்பாகப் பயின்று மனனம்

செய்து, பொருளை நன்கு சிந்தித் துணர்ந்து, நிட்டாபரராய் இருந்து வந்தார்.

• *குறிப்பு : 1) குருபரனுக்கு அநுகூல விருத்தி ஆப்தம் 2) குருபரனுக்கு குற்றேவலே அங்கம், 3) குருவின் வீடு மனை முதலானவற்றைக் காத்தலே தானம். 4) குருபரனை மெய்யாகக் கண்ட சிவமென நம்புவதே சத்பாவம்.

குறிப்பு : * கோவிலூர் மரபு வழி வேதாந்த சாத்திரப் பாடங்களாவன : 1. நாணாசீவ வாதக்கட்டளை, 2. கீதாச்சாரத் தாலாட்டு, 3. சசிவன்ன போதம், 4. மகாராசாத் துறவு. 5. வைராக்கிய சதகம், 6.வைராக்கிய தீபம், 7. இலட்சணாவிருத்தி, 8.வேதாந்த சூடாமணி, 9. கைவல்யநவநீதம் இவை 9ம் ரத்னாவளியாம், 10.விவேக சூடாமணி, 11. பகவத் கீதை, 12. பிரம்ம கீதை, 13. ஈசுவர கீதை, 14. பஞ்சதசி, 15. அஞ்ஞவதைப் பரணி 16. ஞான வாசிட்டம் என்னும் பதினாறு நூல்களாகும்.

இலட்சண கிராந்தமும் - இலக்கண பாடமும்

கல்வியில் ஊக்கம் நிறைந்த பிள்ளைகட்குத் தமது பெற்றோர்கள், மேலும் நன்கு கல்வி பயில ஆக்கந் தருவதைப்போல, நடேசனாரை மிகச் சிறந்த மெய்யறிவாளி யாக்க விரும்பிய ஸ்ரீ மகாதேவ ஞான தேசிகசுவாமிகளது திருவுளக் குறிப்பின்படி, திருவளர்ச்சோலை ஸ்ரீ சுப்பராய சுவாமிகளிடம் நடேசனார் சிலகாலந் தங்கி தர்க்க மீமாம்ச பாடங்களையும், இலக்ஷண கிரந்தங்களான விசார சந்ரோதயம், பாலபோதம், விசார சாகரம், பஞ்சகதசி முதலியவைகளையும் நன்கு உபதேச பாடமாகக் கேட்டறிந்தார்.

பின்னர், அம்பாசமுத்திரம் ஸ்ரீ ஆத்மானந்த சுவாமிகளிடம், நன்னூல், யாப்பருங் கலக் காரிகை விருத்தியுரை முதலிய இலக்கண நூல்களையும், திருக்கோவையார் முதலிய அருள் நூல்களையும், முறையான இலக்கியங்களையும் கற்றுச் சுயமாகக் கவிபாடும் இயற்புலமையையும் பெற்று, அநேக தோத்திரங்களையும், சாத்திரங்களையும் இயற்றினார்.

வடமொழி - தென்மொழி வல்லுநர்.

மற்றும் வடமொழி கற்ற சாதுக்களிடம் அம்மொழியையுங் கற்றறிந்து பண்டிதராகி, வடமொழியிலேயே பகவத்கீதை முதலிய ஞான நூல்களைப் பாராயணமும், ஆராய்ச்சியும் செய்து பிறருக்கும் வடமொழியிலேயே போதித்தார். ஸ்ரீ சங்கரரின் 'பஜகோவிந்தம்' ஸ்ரீதோடகாச்சாரியாரின் ஸ்ரீ சங்கர குரு அஷ்டகம், இரண்டையும் மொழி பெயர்த்துத் தூய தமிழ்க் கவிதைகளாகப் பாடியும் பல வடமொழி நூல்களைத் தென் மொழியில் மொழி பெயர்த்தும் உள்ளனர்.

கலைமகளின் அருட் கண்ணோக்கால், நடேசனார் அவர்கள் ஞான மார்க்கத்தின் இரண்டு கண்களெனச் சொல்லத்தக்க, வடமொழி-தென்மொழி என்னும் இரு பெரு மொழி வல்லுநராய், சாத்திரம் பயின்ற பண்டிதராய், சுயக் கவிபாடும் பாவாணராய் விளங்கினார்.

குறிப்பு : அந்நாளில் ஸ்ரீ ரங்கம் 'வாணி விலாசின்' வாயிலாக வெளி வந்த, வடமொழி சம்பந்தமான மாத சஞ்சிகையில் நடேசனார், மிகக் கடுமையான வியாக்கரண வாக்கியங்களுக்குத் தக்க விளக்கந் தந்து வந்ததைக் கண்ட வடமொழி வல்லுநர்கள், மிகப் பாராட்டியுள்ளனர் என்பதை ஈண்டு குறிப்பிடுவது அவசிய மாகின்றது.

கேரள நாராயண குருவின் நல்லாசி.

கேரள நாட்டின் சமரச சன்மார்க்க ஞானியாகவும்' சமய சீர்திருத்த சமுதாய புரட்சியாளராகவும், விளங்கிய ஸ்ரீ நாராயணகுரு வர்க் கலையில் சிவகிரி மடமும், மற்றும் பல இடங்களில் கிளை மடங்களும் நிறுவிய சான்றோர் ஆவார். தமிழகத்தில் அவரது சிறப்புற்றச் சீடர்கள் சென்னை, காஞ்சீபுரம் முதலிய இடங்களில் அவர்பெயரால், கிளை மடங்களும் நிறுவியுள்ளனர்.

ஸ்ரீ நாராயண குரு ஒரு சமயம், ஸ்ரீ ரமண முனிவரை காண விரும்பித் திருவண்ணாமலை வந்திருந்தார்கள்.

அவ்வமயம் ஈசானிய மடத்தின் தலைவராவிருந்த ஸ்ரீ மகா தேவ ஞான தேசிக சுவாமிகள், ஸ்ரீ நாராயண குருவைக் கண்டு, ஈசானிய மடத்துக்கும் அழைத்து வந்து நன்கு உபசரித்தனர் அங்கு யாவற்றையும் சுற்றிப்பார்த்துக் கொண்டு வந்த ஸ்ரீ நாராயண குருவின் (குருதிருஷ்டி) பார்வையானது, நந்தவனத்தில் அப்போது மலர் கொய்து கொண்டிருந்த நடேசனார் மீது நோக்கியது.

ஸ்ரீ நாராயண குருவின் திருநோக்குக்கு ஆளாகிய நடேசனார் மெய்ம்மறந்து, தமது கையில் பிடித்திருந்த புட்பக்குடலையுடன் விரைந்து வந்து, பணிவுடன் வணங்கி நின்றார். தம்மை அன்புடன் வணங்கியதை ஏற்று மகிழ்ந்த ஸ்ரீ நாராயண குரு நடேசனாரை நோக்கி, மலையாள மொழியில், "இப்பையன் நிரம்பக் கெட்டிக்காரன்; நல்ல முமுக்ஷு; நன்றாக படிப்பான்; பின்னாளில் பெருநிலை பெறுவான் நன்னிலைக்கு வருவான்" எனத் திருவாய் மொழி பகர்ந்தருளினார். அந்த நல்லவரின் நல்லாசியும், நடேசனாரை நன்கு உயர்த்தியது.

ஈசானிய மடத்தின் பீடாதிபதியாதல்.

ஸ்ரீ மத் மகாதேவ ஞான தேசிக சுவாமிகள், கோவிலூர் மடத்தின் ஏழாவது பீடாதிபதியாகத் தலைமைப் பொறுப்பை வகிக்கச் சென்ற பின்பு, ஈசானிய மடத்தின் தலைமைப் பெறுப்பைத் தமது, நல்வழி முறைச்சீடராகச் சிறந்து விளங்கிய நடேசனாருக்குத் தந்து மகிழ்ந்து ஸ்ரீ நடேச ஞானதேசிக சுவாமிகள் எனத் தீட்சா நாமமும் சூட்டிப் பீடாதிபதியாக்கி ஆசீர்வதித்துக் கோவிலூர் சென்றார்கள். அப்போது ஸ்ரீ நடேச சுவாமிகளுக்கு வயது இருபத்து மூன்று. அது முதல் இருபத்தாறு ஆண்டுகள்(1921 முதல் 1947-ஆம் ஆண்டு வரை) மடாதிபதியாக இருந்து சிறப்புற ஈசானிய மடத்தில் அருட்பணியாற்றினார்கள்.

எளிமையாக வாழ்ந்த பீடாதிபதி

ஈசானிய மடத்தின் எட்டாவது பீடாதிபதியான சுவாமிகள், மடத்தின் தலைமை தனதென நினைவெழாத் திண்ணியராக, தனக்கெனத் தனித்த சலுகைகள் விரும்பாத விரதராகத் தாம் அருணாச்சல சிவத்தின் திருவருள் நிழலில், அருட்குடியாய் வாழுகின்றோம் என்னும் அகலா நினைவினராகப் பிற சாதுக்களுடன் சமநிலையில் வாழ்ந்து எளிமை மிக்க வாழ்க்கை நடத்தினார்கள்.

சாத்திர விதிகளும், சந்நியாச ஆச்சிரமமுறைமை களுக்கும் முற்றுங் கட்டுப்பட்டும், ஆச்சார அநுட்டானங் களில் சிறிதும் வழுவுதல் இன்றியும், ஏனையோருக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். மடத்தினைத் தற்காத்தலில் மிகக் கருத்தாக இருந்து, எக்குறையுமின்றி பராமரிப்பு இயல்பாக இயங்க வழிகோலினார். ஈசானிய மடம் பேரருட் பொலிவுடன் விளங்கியது.

ஞானப் பேராசிரியர் அன்றாட அலுவல்கள்.

திருவருளால் தாம் பெற்றிருந்த தலைமைத் தானத்திலிருந்து, குருவருளால் தாம் கற்றிருந்த பெருங் கல்வியினைத், தமது மாணாக்கர்களுக்கு, மலைமாண்பிடையப் பேராசிரியராக விளங்கி, ஞானசாத்திரங்களை முறையாக, அன்றாடம் அயராது போதித்து வந்தார்கள். சுவாமிகளிடம் பாடம் கேட்பது தத்துவ ஞான உபதேசமாகவும், அருள் விருந்தாகவும், செவிச் செல்வமாகவும் இருக்கும். அப்பேற்றினை பெற்றோர் பெரும் பாக்கிய சாலிகளே.

கையில் புத்தகம் எடுக்காமலும், சிறிதும் சிரமப் படாமலும், ஆழ்ந்து சிந்தித்தும், இலக்கண வழுவின்றியும், பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் சாத்திர மேற்கோள்களைச் சொல்லி, செவிமடுப்போரது மனத்தில் பசுமரத்து ஆணியெனப் பதிய வைத்திடுவர். அநுபவச் சான்றுகள் நிறைந்த அவர்தம் அருட்போதனையில் சிறிதும் வீண் சொல்லே காண இயலாது.

இவ்வாறு ஞான நூல்களைப் போதித்தலும், நீதி நூல்கள் ஆராய்தலும், உறுபொருள் ஆய்வும், உரையடக்கலும், அறிதுயிலில் அமர்ந்திருத்தலும், பிறர் நலம் பேணலும், காலத்தின் அருமையுணர்ந்து சிறிதும் அவப்பொழுதாக ஆகாமல் - தவப் பொழுதாக ஆக்கலுமான அருங்குணங்கள், இயல்பாக சுவாமிகள் பால் - தனிச் சிறப்பக அமைந்திருந்தன.

நாகம் வலம் வருதலும், நகராதிருத்தலும்.

மடத்தில் ஒருநாள் 'வைராக்கிய தீபம்' பாடம் நடந்து கொண்டிருந்தது. சுவாமிகள் வழக்கம்போல் மெய்மறந்து போதனையில் ஈடுபட்டிருந்த சமயம். நாகப் பாம்பொன்று பாடம் நடக்கும் இடத்தருகே வந்து படமெடுத்து நின்று, தாமும் பாடம் கேட்பது போன்று, ஊர்ந்து செவிமடுத்திருந்தது. 'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்' என்பதற்கேற்ப, பாடம் கேட்டுக் கொண்டிருந்த சாதுக்கள் 'பாம்பு' என்றலறிப் பயந்து வெளியேறினர். மனம் பதைபதைத்து நின்றனர்.

இந்நிலையில், சுவாமிகள் சிறிதும் அஞ்சவில்லை. இருக்கையினை விட்டு எழுந்திடவுமில்லை. பாம்பினை யாரும் அடித்திட அநுமதி தந்திடவும் இல்லை. நாகமானது சுவாமிகளது திருவடித் தாமரையின் ஓரமாகஅருகில் வந்து, அவர்கள் அமர்ந்திருந்த புலித்தோல் இருக்கையினை வலமாகச் சுற்றியவாறு, அமைதியுடன் விரைவில் வெளியேறியது சுவாமிகள் சிறிதும் சலன மேதுமின்றி இருந்து, பின் சாதுக்களை அழைத்து 'வைராக்கிய தீபம்' பாடத்தைத் தொடர்ந்தனர். நாகத்தைக் கண்டும் நடுங்காது 'வைராக்கிய தீபமாக' விளங்கிய சுவாமிகளை சீடர்கள் வியந்து போற்றினர்.

தவப்பெருமையும், தனித்திருத்தலும்.

தவத்தால் வருவதே இன்பம் என்பது சுவாமிகள் தம் துணிவு.

'தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.'

என்னும் திருக்குறளுக்கேற்பத் தவமே, தனது தலையான பணியெனக் கொண்டு ஒழுகி வந்தார்கள். இத்துணைக் காரியங்களிலும் தாம் தனித்திருக்கும் குறிக்கோளில் மட்டும் சிறிதும் மாறுபடுவதில்லை.

'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே – வித்தகமாய்க்
காதி விளையாடி இருகை வீசி வந்தாலும்
தாதி மனம் நீர்க்குடத்தே தான்'

என்ற பாடலின்படி தன்னந் தனிமையிலிருந்து நிட்டை கூடித் தமதுண்மைச் சொரூப வடிவத்தை நன்குணரும் நிலையிலிருந்து வேறுபடுவதில்லை. சுருங்கக் கூறுமிடத்து மெய்ஞ்ஞானத்தின் சமநோக்கானது உள்ளத்தில் நிலைநின்று ததும்பியது.

காயிகம், வாசிகம், மானதம் என்னும் மூவகைத்தவ நிலைகளும் நிகழ்ந்து கொண்டேயிருக்கக் குறிக்கோள் மட்டும் யாதோ ஒன்றை நாடி நிற்கும். வேதாந்ததே, வேற்ற விளங்கும் வேதப் பொருளிடத்தே யன்றோ. முமூக்ஷு முத்தர் நாட்டமுறும். உள்விழித்துப் புறம் உறங்குவார் நிலையதுவேயாம்.

'தானாகக் கூடுந் தலைவன் முன் பேச்சடங்கு
மானந்த மோன மது'.

ஆதலால், அந்நிலையினை வாயினால் விளக்க முடியாது, எழுத்தால் எழுத இயலாது.

அனைவருக்கும் வழிகாட்டி ஆதரவாளர்

அருணையம் பதியில் சுவாமிகள் வதிந்த காலத்தை பொற்காலம் எனலாம். பொதுவாக ஆத்தீகர்கள் அனைவருக்கும், சிறப்பாகச் சாதுக்களுக்கும் முறையே தெய்வ வழிபாட்டிற்கும் துறவு நெறிக்கும் வழிகாட்டியாக

விளங்கினார். சாதுக்கள், புலவர்கள், ஏழை எளியோர், அங்கவீனம் முற்றோர், அநாதைகள் அனைவரிடமும் மிகுந்த பரிவுகாட்டுவர். ஏற்ற நல்லாதரவு நல்குவர். இத்தகைய பேரருள்பெற்றியார், அன்றாடம் வழிபாட்டிற்காக மாலை நேரத்தில், 'அருணேசன்' சந்நதிக்குத் தமது துறவிகள் குழாம் சூழப், பயபக்தியுடன் வருவதைக் காண்பதே பெரும் பேறாகும்.

அன்னதானம் ஆற்றும் அரும்பணி.

'சோற்றுத்துறை எம்மான்' என இறைவனுக்கோர் பெயரும் உண்டு. இறைவனை ஆலயத்தில் வழிபட்டு விட்டு, விடுதிக்கு வந்து நடமாடுங் கோவிலீசர்கட்கு, அன்னமிட்டு, அவர்கள் உண்டு மகிழ்ந்து உவகை பூத்தலைக் காண்பதில்,

> *'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை*
> *வைத்திழக்கும் வன்க ணவர்'.*

என்ற திருக்குறளுக்கேற்ப, ஈத்துவக்கும் இன்பம் சுவாமிகளுக்கு என்றும் உண்டு. திருப்பணிச் செம்மலும், அன்னதான தாதாவுமான அருட்திரு பாடகச்சேரி இராமலிங்க சுவாமிகளைப்போல மடத்தில் நடத்தி மகிழ்ந்ததோடல்லாது, அண்ணாமலைக் கார்த்திகை தீபப் பெருவிழாவிலும் சிறப்பு நடத்தி இன்புறுவர்.

திருக்கார்த்திகையன்று, மலைமேலிடும் தீபவொளி யைக் கண்டு, வழிபடப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு, திருவண்ணாமலைக்கு வந்திடுவர். அத்தகை யோருள் பல துறவிகளும் இருப்பர். அவர்களுக்கெல்லாம் உணவிடும் நல்லறத்தை, ஒவ்வோராண்டும் சுவாமிகள் மேற்கொண்டு, விழாவின் பத்து நாட்களிலும் நாளொன்றுக்கு, ஆயிரம் பேருக்குக் குறையாது அன்னம் பாலித்து இன்பமுறுவர்.

"மடாலயத்தி லாற்றும் அறமனைத்தும் தேகான்ம பாவம் நீங்கிப் பிரமாநுபாவம் ஓங்கற் பொருட்டே யன்றோ !

அருணை முனிவரும் - காஞ்சிப் பெரியவரும்

ஒரு சமயம், பௌர்ணமியன்று கிரிவலம் வந்து கொண்டிருந்த ஸ்ரீ ரமண முனிவர், ஈசானிய மடத்திற்கும் எழுந்தருளினார். சுவாமிகளால், பேரன்புடன் உபசரித்து வரவேற்கப்பட்டார். அப்போது மடத்தில் பகவத் கீதையைப் பற்றிய ஆராய்ச்சி வகுப்பொன்று நடந்துகொண்டிருந்தது. தம்மிலும் தக்காரை மதிக்கும் தகைமையுடைய சுவாமிகளின் வேண்டுகோளுக்கிணங்க, ஸ்ரீ ரமண முனிவர் இரண்டு மூன்று கீதைச் சுலோகங்களுக்கு புதுமையான பொருள் கூறிக் கேட்போரை வியப்பில் ஆழ்த்தினார்கள். ஈசானிய மடம் சிறப்பாக இயங்கி வருவதையும், தக்க ஆசானிடம் பக்குவிகள் பாடங்கள் கேட்டு வருவதையும், மிகவும் பாராட்டிச் சென்றார்கள்.

மற்றொரு சமயம், நம் சுவாமிகளின் புண்புடைமையை முன்னரே நன்கறிந்திருந்து, நேரில் பார்க்கத் தமது திருவுள்ளத்தில் எண்ணியிருந்த ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவாள் ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் திருவண்ணாமலை வந்திருந்தபோது, மலைவலம் வந்து கொண்டிருக்கையில் ஈசானிய மடத்திற்கு எழுந்தருளி, பூரண கும்ப மரியாதையை ஏற்றுச் சுவாமிகளைப் பார்த்து, மிகுந்த களிப்புடன் அளவளாவித் தமது கழுத்தில் இருந்த மலர்மாலையைத் தம் கரத்தாலெடுத்துச் சுவாமிகளுக்கு அணிவித்து அன்புடன் வாழ்த்திச் சென்றார்கள்.

'பாம்பின் பாதம் பாம்பே யறியும் என்றவாறு.
ஞானிகளின் பெருமையை ஞானிகள் தான் நன்கறிவர் !'

சாதுசங்கம் கண்ட சதுரர்.

துதி வெண்பா

'தூயதமிழ் நாட்டுத் துறவிகள் சங்கமென்றும்
ஞாயிறுபோன் மக்களுக்கு நன்மைசெயத் - தாயாகும்
உண்ணா முலையாம் உமைசே ரொளிப்பிழம்பாம்
அண்ணா மலைதுணையா மால்'.

துறவிகள் சங்கத் துதி.

தமிழகத்தின் தூய துறவிகள் சங்கத்திலே துணைத் தலைவராகப் பங்கேற்று தாயகத்தில் பன்னிரண்டு துறவிகள் மாநாட்டினை பாங்காய் நடத்தி தொண்டு புரிந்து மாநாட்டில் தலைமையேற்றுச் சுவாமிகளாற்றிய சொற்பொழிவு என்றென்றும் போற்றிப் புகழ்தற்குரியது. தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம் வளர்ச்சி பெற ஆதீனத் தலைவர்கட்கும், மடாதிபதிகட்கும் பக்தர்கட்கும், துறவிகட்கும் விடுத்த சுவாமிகளது விஞ்ஞாபனம்.

'தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம் தோன்றி மூன்றாண்டுகள் ஆகிவிட்டபடியால், தமிழ்நாட்டிலுள்ள துறவிகளனைவரும் இச்சங்கத்தைப் பற்றி அறிந்திருக்கலா மென்று நினைக்கிறேன். சமய வளர்ச்சி. துறவிகளின் நன்மை, ஆதீனங்கள், மடாலயங்களின் நன்மை, என்ற இவற்றை நோக்கமாகக் கொண்டு சங்கம் தொடங்கப்பட்டது. பொதுமக்கள் துறவிகளைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியதற்கு மாறாக, நிந்தனை செய்து வருகின்றனர். அதனைக் காரணமாக வைத்துக்கொண்டு மடங்களின் நிர்வாகத்தில் அரசாங்கத்தார் தலையிட முயன்று வருவதை உலகம் அறியும்.

இந்த நிலைமையில் துறவிகள் தவவொழுக் கத்தினால் தங்கள் பெருமையை வெளிப்படுத்திச் சமயப் பிரச்சாரம் செய்து, பொதுமக்களின் நல்லெண்ணத்தைப் பெறவும், அரசாங்கத்தின் தலையீட்டிலிருந்து ஆதினங்கள் மடாலயங்களை நீக்கிக் கொள்ளவும், துறவிகள் சங்கத்தின் மூலம் பெருமுயற்சி செய்ய வேண்டியிருக்கிறது.

இதனைச் சிந்தித்துப் பார்த்து, ஆதீனத் தலைவர்களும், மடாதிபதிகளும், துறவிகளும் ஒன்று சேர்ந்து இச்சங்கத்தை வலிமை வாய்ந்ததாக ஆக்கினால், அதன் மூலம் தற்கால விபரீதப் போக்கிலிருந்து நம்மையும் விடுவித்துக்கொண்டு, உலகத்தாரையும் விடுவித்தவர் களாவோம். ஆதலால், துறவிகள் அனைவரும் இச்சங்கத்தில் உறுப்பினராகச் சேர்வதோடு, எல்லாவகை யாலும் சங்க நோக்கங்கள் ஈடேற ஒத்துழைக்குமாறு விஞ்ஞாபித்துக் கொள்கின்றேன்.'

திருவண்ணாமலை இப்படிக்கு.
9-12-47 (ஓ-ம்)நடேசசுவாமி, ஈசானியமடம்

குறிப்பு : இவ்விஞ்ஞாபனம் 'துறவி' என்னும் திங்கள் வெளியீட்டிலிருந்து எடுத்தது.

வேதனை தரும்-சோதனைச்சம்பவம்

இவ்வாறு, நம் சுவாமிகள் பேரருட்புகழுடன் வாழ்ந்து வரும் பொழுது, 'உள்ளியர் தெள்ளியர் ஆயினும் ஊழ்வினை பைய நுழைந்து விடும்', என்னும் பழமொழிக்கேற்ப, வேதனை தரும் சோதனைச் சம்பவம் ஒன்றும் எதிர்பாராமல் நிகழ்ந்து விட்டது.

அண்ணாமலையார் கார்த்திகைத் தேரோட்டத் திருவிழாவில் சுவாமிகள், தேரின் முன்பு நின்று அடியார்களுடன் சுவாமிதரிசனம் செய்து கொண்டிருக்கும் பொழுது, கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் நிமித்தம், மக்களைத் தடுத்து வந்த 'ஒரு போலீஸ்காரர்' மடத்துச் சாது ஒருவதைத்(சொரூபானந்த சுவாமியைத்) தடியால் தட்டவும். இதனைக் கண்ணுற்ற சுவாமிகள் அவ்விதம் அச்சாதுவைச் செய்ய வேண்டாமெனக்கோரி, 'போலீஸ்' காரரிடம் தமது கையினை நீட்டித் தடுக்கும்பொழுது, சுவாமிகளது கைவிரலானது, போலீஸ்காரர் தலைப்பாகையில் தவறிப் பட்டிடத் 'தொப்பி' கீழே விழுந்து விட்டது.

இதனால் ஆத்திரமுற்ற மூர்க்கத்தனமான அப்போலீஸ்காரர் வெகுண்டு, சுவாமிகளை இன்னாரெனத் தெரியாமல் அவர்கள் தமது பொன்னார் திருமேனியில் 'தண்டோபாயம்' செய்துவிட்டார். இதனைக் கண்ணுற்ற அடியவர்களும், மற்றவர்களும் கொதித்தெழுந்து, "நமது ஈசானிய மடத்து பீடாதிபதியாயிற்றே, இப்புண்ணிய மூர்த்தியின் திருமேனியில் இப்படிச் செய்யலாமா? என்று போலீஸ்காரரைக் கடிந்து பேசி, அவரைக் காவல்துறை நிலையத்திற்கு அழைத்து வந்து, மேலதிகாரிகளிடம் ஒப்புவித்து கடும்புகார் செய்தனர்.

செய்தியறிந்த போலீஸ் சூப்பிரண்டும், சர்க்கிளும் நியதி மீறி நடந்த போலீஸ்காரரைக் கண்டித்து விட்டு, நேரில் இருவரும் ஈசானிய மடம் சேர்ந்து சுவாமிகளைக் கண்டு, நடந்து விட்டச் சம்பவத்திற்குக் காவல்துறையினர் சார்பாக மிக வருத்தமும், மன்னிப்பும் தெரிவித்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட அப்போலீஸ்காரரைச் 'சஸ்பெண்டு' செய்துவிட்டு, உடனடியாக அவரது மீது தக்க நடவடிக்கை எடுப்பதாயும் வாக்குறுதியளித் தனர்.

தன்மீது அன்பும் மதிப்பும் கொண்டு இவ்விதம் சமாதானங் கூறிய காவல் துறை மேலதிகாரிகளிடம் சுவாமிகள், "ஏதோ வினைப் பிரகாரம் நடந்து விட்டது, இஃதொரு சாதாரண சம்பவம், இச் சரீரத்தில் 'தண்டோபாயம்' செய்து விட்ட போலீஸ் காரருக்கு எவ்வித தண்டனையும் தந்து விடக்கூடாது. அவரது வேலைக்கும் ஊறு விளைவிக்கலாகாது. மேல் நடவடிக்கை எதுவுமே தேவையில்லை' யெனச் சமாதானம் சொல்லி அவர்களை அன்புடன் வழியனுப்பி வைத்தார்கள்.

அன்பர்கட்கு அமைதிப் பொன்மொழி.

இச்சம்பவத்தால் ஆத்திரமுற்று அமைதியை இழந்திருந்த அடியவர்களிடமும், தம்மைப் பார்க்க வந்த அன்பர்களிடமும்,

சுவாமிகள் மிகச் சாந்தமாகச் சமாதானங்களைச் சொல்ல லானார்கள்.

"முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்".

– கந்த புராணப் பாடல்.

" வழியிலே போகும்போது மரக்கிளை ஒடிந்து மேலே வீழ்ந்து விடுமேயானால் அம்மரக்கிளையைக் கோபித் தென்ன பயன் ?"

"சாலை விழியிலே போகும்போது பெரும் புயற் காற்றடித்துக் கண் முதலிய உறுப்பிகளுக்குத் துன்பம் தருமானால், அப்புயலைத் தண்டிக்க இயலுமா?"

"தன்னுடைய நாக்கைத் தனது பற்களால் தவறிக்கடித்துக் கொண்டால், பல்லை உடைத்தெறிந்திட இயலுமா?"

"சரீரத்தின் ஒரு அவயத்தால், மற்றொரு அவயத்திற்கு தவறுதலாக ஊறு நேர்ந்தால், அவ்வவயத்தை என்ன செய்திடுவது?"

" இஃது கர்மாதீனமாக வந்திருக்கின்றது. அனுபவித்து ஆகவேண்டடியதே".

" சமணர்கள் செய்த மிகக் கொடிய துன்பத்தையும் சகித்துச் சிவத்தையே சிந்தித்திருந்ததனால்தான் அப்பர் சுவாமிகளுக்குப் பிறவித்துன்பம் நீங்கிற்று. ஆகையால், நாமும் நமக்கேற்படக்கூடிய துன்பங்களைச் சகித்துக் கொண்டு எல்லாம் சிவனருட் செயலெனச் சிவத்தையே

சிந்தித்திருத்தல் நலம்". என இனிய சமாதானப் பொன் மொழிகளைச் சொல்லி, அனைவரையும் அமைதி பெறச் செய்து, அப்போலீஸ்காரருக்கு யாரும் தீங்கொண்றும் செய்துவிட வேண்டாமெனத் தீர்மானமாகச் சொல்லி விட்டார்கள். திருமேனியில் ஏற்பட்டிருந்த வலியையும், உட்புண்ணையும் மனோதிடத்தால் சகித்திருந்தார்கள்.

மெய்ப்பொருள் நாயனார் வழித்தோன்றல்.

"திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று".

என்னும் 'பொறையுடைமை' அதிகாரத் திருக்குறளுக்கு ஏற்பத், தமக்கிடுக்கண் விளைவித்த போலீஸ்காரருக்கு எவ்விதத் தீங்கும் செய்துவிட வேண்டாமெனக், காவல்துறை மேலதிகாரிகளிடமும், தமது அடியவர்களிடமும் அன்பாகக் கேட்டுக்கொண்ட, சுவாமிகளின் கருணையுள்ளத்தையும் நாம் எவ்வாறு புகழ்ந்திடுவது? சுவாமிகள் மிகமிக உயர்ந்த சாந்த குணாலயக் குன்றெனச் சாற்றவும் வேண்டுமோ? இச்சம்பவத்தைச் சீத்தூக்கி ஒப்பிட்டு நோக்குமிடத்து;

"தன்னைவதை முத்தநா தன்றனையு மெய்ப்பொருளார்
முன்னை நனி காத்தார் முருகேசா – மன்னுலகில்
இன்னா செய்தாரை யொருத்த லவர்நாண
நன்னயஞ்செய்து விடல்".

என்னும் சிதம்பரம் ஈசானிய மடம் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் அருளிய, 'முருகேசர் முதுநெறி வெண்பா'வுக்கு ஏற்பத், திருத்தொண்டர் புராணத்துள்வரும், நாயனார்கள் அறுபான் மூவருள் ஒருவராகிய, மெய்ப்பொருள் நாயனாரின் உருக்கமிகு வரலாறு, நமது நினைவுக்கு வருகின்றது. சுவாமிகளும் அந்த மெய்ப்பொருள் நாயனாரின் மரபு வழித் தோன்றலன்றோ!

தவறிழைத்தவரின் மனமாற்றம்.

"தண்டோபாயம்' செய்த அப்போலீஸ்காரர், தான் தவறிழைத்திருந்தும் தன்னை மன்னித்துக் காத்தருளிய, தயாமூர்த்தியாகிய சுவாமிகளின் திருவடிக்களில் வீழ்ந்து வணங்கிக், கண்ணீர் மல்கித் தன்னை மன்னித்தருளுமாறு வேண்டினார். தவறுதலாகத் தான் செய்த தவறுக்குப் பரிகாரமாக தனது ஒருமாதச் சம்பளத்தை, அடியார்களுக்கு அன்னமிட மடத்து நிதியில் சேர்த்தருள வேண்டுமெனக் கோரிக்கை கொடுத்தார். குற்றம் இழைத்தவரது மனமாற்றம் தான் என்னே ! என்னே !!

சித்தாருடர் அறிவுரையும், ரமணரின் பரிவுரையும்

இல்லறத்தில் குடும்பாதிபதியாகக் கட்டுண்டிருத்தல் இரும்பு விலங்கால் பிணிப்புண்டு கிடத்தலைப் போன்றதாம்யெனின், துறவறத்தில் மடாதிபதியாகக் கட்டுண்டிருத்தல் பொன்விலங்கால் பிணிப்புண்டு கிடத்தலைப் போன்றதாம் என்பதனை அநுபவ வாயிலாக நன்குணர்ந்திருந்த சுவாமிகளது மனம் ஏகாந்தத்தை நாடிற்று. தலைமைப் பொறுப்பில் வெறுப்பும், தவவாழ்வில் விருப்பும் இயல்பாக ஏற்படலாயிற்று சுவாமிகள் திருக்கோகர்ணத் தலயாத்திரையை மேற்கொண்டு, அஞ்ஞான்று பெருந்தவச் சீலராக விளங்கிய ஹூப்ளி ஸ்ரீ சித்தாரூட சுவாமிகளைத தரிசித்துத் தமது உள்ளக் கிடைக்கையை வெளிப்படுத்தினார். சித்தாரூடர், சுவாமிகளின் பரிபக்குவ நிலையினையுணர்ந்து, மகிழ்வு கொண்டு மெய்நிலையுணர்த்தி, மடாதிபத்தியத்தை விடாமலே தவமியற்றும் வழிவகைகளைக் கூறி, வாழ்த்தி ஈசானிய மடத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

தனித்து தவமியற்றப் பிறிதொரு சமயம் சுவாமிகள், அருணையங்கிரி விரூபாட்சிக் குகையில் நிட்டை கூடி மனம் அமைதியுற்ற பின்பு, ரமணாச்சிரமம் சென்று மகரிஷிகளைக் கண்டார்கள். ஸ்ரீ ரமண முனிவர் சுவாமிகளின் தவநிலை யினையுணர்ந்து, அன்புடன் வரவேற்றுத் தாமும்

அருகிலிருந்து, சுவாமிகளுக்கு பசியாற்று வித்து, "இத்தகைய கடுந்துறவு உங்கட்குத் தேவையில்லை. மடாதிபுத்தியப் பொறுப்பிலிருந்து கொண்டே தவமியற்றல் தக்கதாம் எனப் பரிந்துரை பகர்ந்தருளினார்கள்.

" *அத்தைத்தின் றாங்கொளிரு மானந்த சுத்தர்க*
ளொத்தைத்தின் றெங்கிருந்ததா லென்?".

பின்னர் சுவாமிகள் ஈசானிய மடத்துப் பெரிய நடை கிணற்றுக்கரையினில் படித்துறையும், தியான மண்டபமும் புதிதாகக் கட்டி ஸ்ரீ விநாயகர் ஆலயமும் அங்கே அமைத்துத் தாம் தனித்திருந்து அமைதியாகத் தவமியற்றினர். அடியவர்கள் தங்குவதற்குப் புதிய விடுதிகளையுங் கட்டி உதவினார்கள்.

பொருளில் பற்றின்மை, நிராசையின் வலிவு

சுவாமிகள் எஞ்ஞான்றும் பொருளில் சிறிதும் பற்றுக் கொண்டதே இல்லை. 'ஓடும்-பொன்னும் ஒரு பொருள்போல' ஒக்க நோக்கும் பீடுபெறு நிலையையே மேற்கொண்டிருந் தார்கள்.

"*ஓடும் இரு நிதியும் ஒன்றாகக் கண்டவர்கள்*
நாடும் பொருளான நட்பே பராபரமே".

தாயுமானார்.

'குரும்பேறி' யென்ற கிராமத்திலிருந்து * நல்லவர் ஒருவர், இல்லந்துறந்து துறவறமேற்றிட எண்ணினார் ஈசானிய மடத்தைச் சேர்ந்தார். சுவாமிகளிடம் துறவு நிலையைப் பெற்றுச் சீடரானார். தாம் கொண்டு வந்திருந்த பொருட்களைக் குருநாதரிடம் அர்ப்பணித்து விடும் நோக்கத்துடன் மடத்தில் கொடுத்து வைத்திருந்தார்.

எதிர்பாராதவாறு சில நாட்களில் அவர் இறைவனடி சேர்ந்து விட்டார். அவர் காலமானதையறிந்த

* அருணாச்சலக் கவுண்டர் என்னும் சதானந்தசாமி (*தீக்ஷா* நாமம் அருணாசலசாமி)

அவரது குடும்பத்தினர்; அண்ணாமலைக்கு வந்து பொருளை அவர் ஈசானிய மடத்தில் சேர்ப்பித்திருப்பதையுணர்ந்து, அதனைத் தங்களிடமே தந்துதவ வேண்டுமெனக் கோரினர்.

'சீடன் சொத்து குருவுக்கே சொந்தம்' என்னும் முன்னோர் முறைமை இருந்தும், மற்றும் மடத்திலுள்ள சிலர் சிறிது பொருளையாவது எடுத்துக்கொண்டு மற்றதைக் கொடுக்கலாமென அபிப்பிராயப்பட்டும், சுவாமிகள் பொருளிற் சிறிதும் பற்றின்மை காரணமாகக் கருணை யுள்ளத்தோடு, பொருள்களனைத்தையும் அக்குரும்பேறித் துறவியின் குடும்பத்தினரிடமே ஒப்புவித்து விட்டார்கள்.

குரு காணிக்கையும் - அன்பளிப்புகளும் மடத்துக்கே சொந்தம்

ஈசானிய மடத்தில் சுவாமிகள் தனது மாணவர்களுக்கு ஸ்ரீஞானவாசிட்டம் முழுமையும் பாடம் நடத்தி முடித்தார்கள். நிறைவேற்று விழாவின்பொழுது சீடர்கள் குருதேவருக்கு சிறப்பான முறையில் திருவடிப்பூசை செய்து குருபாத காணிக்கையாக ஐநூறு வெண் பொற் காசுகள் வழங்கினர்.

அத்தொகையினைத் தமக்கென ஏற்காது, மடத்தின் நிதியிலேயே சேர்த்தார்கள். சுவாமிகள் மடாதிபத்தியம் வகித்து வந்த காலத்தில் பக்தர்கள் தமக்குத் தரும் அன்பளிப்புக் களையும், பாதகாணிக்கைகளையும் அவ்வப்போது மடத்திற்கே உரியதாக ஆக்கி விட்டார்கள். சுவாமிகளக்குப் பொருளில் பற்றின்மையின் வலிவுதான் என்னே!

"ஏது வரினு மெமக்கில்லை யென்றிருப்பார்
போதமருட் சோதியொளிர் பொன்".

திருத்தல யாத்திரையும்- தீர்த்தமாடலும்,

சுவாமிகள் 1932-ஆம் ஆண்டு வாக்கில் தலயாத்திரையை மேற்கொண்டு, காசி முதலிய வடநாட்டுத் தலங்கள் பலவற்றையும் தரிசித்துப் புனித கங்கைநீர் கொணர்ந்து, சேதுயாத்திரையையும் இனிது நிறைவேற்றி இன்பம் எய்தினார்கள்.

இமயம் முதல் குமரி வரையிலுள்ள புனித நதி தீரங்களில் தீர்த்தாமாடி, புண்ணிய - திவ்விய தலங்களில் ஆலய தெரிசனங்களும், மூர்த்திகள் சேவையும் செய்து புளங்காகிதம் அடைந்தனர் என்ற அளவில் செய்திகளறிய முடிந்ததன்றி விவரமான தலயாத்திரைக்குறிப்புகள் நமக்குக் கிடைத்தில.

ஈசானிய மடத்தின் - கிளைமடங்கள்.

ஈசானிய மடத்தின் கிளை மடங்களான மேட்டுப்பாளையம் மடமும், வளவனூர் மடமும், பாலூர் மடமும், அம்பாசமுத்திரம் ஆத்மானந்த சுவாமிகள் மடமும் சுவாமிகளின் மேற்பார்வையில் சீடர்கள் தலைமையில் சிறப்புற இயங்கின.

துறவுக்கு மேல் - ஞானத் துறவு.

இவ்வண்ணம் கால் நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாக (1927- முதல் 1947 முடிவாக), ஈசானிய மடத்தின் சிங்காதனத்தில் பீடாதிபதியாக ஞானச் செங்கோலோச்சிய, ஸ்ரீ நடேச ஞான தேசிக சுவாமிகளும் ஒப்பற்ற ஒழுக்கமும், மடத்தின் பரிபாலனமும், தலைமைப் பொறுப்பின் சிறப்புக்களும், சீடர்களின் முன்னேற்றமும் எங்கணும் பரவிப் பேரருட்புகழை வளர்த்தன. ஈசானிய மடத்தின் கிளை மடங்களின் பராமரிப்பும் சிறப்புற்று விளங்கின.

சுவாமிகட்கு எவ்விதமான இடையூறுகளும், தடைகளும் இல்லாமல் இருந்தும், மடாதிபத்தியம் தமக்கினிப்

போதுமென எண்ணினார்கள். தன்னிச்சையோடு சுதந்திரமாகத் தனித்து வாழ்ந்து தவமியற்றித், தாம் மேற்கொண்ட சந்நியாச ஆச்சிரமத் தருமத்திற்கேற்பப் பற்றற்ற பரம ஞானியாக வாழ்வதே எஞ்சியகாலக் கடமையெனக் கருதலானார்கள்.

"இடம்பொருளே வலைக்குறித்து மடம்புகும்நா யெனவே
எங்கேநீ யகப்பட்டா யிங்கேநீ வாடா
மடம்பெறும்பாழ் நெஞ்சாலே அஞ்சாதே நிராசை
மன்னிடமே இடமந்த மாநிலத்தே பொருளுந்
திடம்பெறவே நிற்கினெல்லா வுலகமும்வந் தேவல்
செய்யுமிந் தநிலைநின்றோர் சனகன் முதல் முனிவர்
கடம்பெறுமா மதயானை என்னவுநீ பாசக்
கட்டான நிகளபந்தக கட்டவிழப் பாரே".

"நினைவொன்று" பாடல்– தாயுமானார்.

உலகில் ஒருவன் இடம் பொருள் ஏவலை எதிர் பார்த்து அலைவது; வைதீகர்கள் வாழம் மடாலத்தில் ஒரு நாய் நுழைந்து, மொத்துண்டு அலைவதையொக்கு மென்பார். "மடம் புகு நாய்" என்றார்; அன்றியும் உடம்பின் நிலையையும்-உயிரின் நிலையையும்; உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பினையும் அறியாமல், உடம்பின் பொருட்டு இடம் பொருள் ஏவலுக்கு வீணாய் அலைவது மடம் புகும் நாய் போலும் எனப் பொருள் கொள்ளினும் அமையும் இதனை.

"உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொடு யிரிடை நட்பறியாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின்றாரே".

எனவரும் திருமந்திரத்தாலும் உணர்க.

*"புலவர்புகழ் முதற்பூமி சுபேட்சைவிசா ரணையிரண்டாம்
பூமியாகும்
நலத்னுமா னசி மூன்றாம் பூமிசத்து வாபத்தி
நாலாம் பூமி
சொல்லுமஞ்சத் திப்போரும் பதார்த்தா பாவனைபேருந்
துரியப் பேரும்
மலினமறு மகனேயீந் தாறேழு பூமிகளாய்
வகுத்தார் மேலோர்.*

—கைவல்யநவநீதம்

குறிப்பாக தாமடைய வேண்டிய ஆன்ம ஞான இன்ப அனுபவத்தில் அதாவது, வேதாந்த ஞானபூமிகள் * ஏழனுள் ஐந்தாம் பூமி நிலையின், 'சீவன்-முக்தி' ஆனந்தத்தில் திளைத்திருக்கப் பெரும் விருப்புக் கொண்டு, மடாதிபத்தியப் பொறுப்பைத் துறந்து விடத் தீர்மானித்தார்கள்.

உடுத்தியிருந்த உடையையும் உதறிய உத்தமர்.

சுவாமிகள் மடத்தில் தம்முடையனவாகக் கொண்டிருந்த பொருட்களில் எதனையும் எடுத்துக்கொள்ளாது, தமது இடையில் உடுத்தியிருந்த உடையையுங்களைந்து மடத்திலே விட்டு வைத்து விட்டு, அன்பளிப்பாகத் தந்திருந்த கதராடையைக் கல்லாடையாககக் காவி தோய்த்துப் புனைந்து கொண்டு, துறந்தாருள் சிறந்தாராகிய பட்டினத்துச் சுவாமிகளைப்போல, ஈசானிய மடத்தின் தலைமைப் பொறுப்பைத் தம் மாணவர்களுள் ஸ்ரீ ராமநாத சுவாமிகளிடம் ஈந்துவிட்டு, மடத்திலிருந்து எதையும் எதிர்பாராது வெளியேறினார்கள்.

---

* ஞான பூமிகள் ஏழாவன : சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அசஞ்சத்தி, பதார்த்த பாவனை, துரியகை என்பவனவாம்.

இவை முறையே துற்சங்க வர்ச்சிதர்களும், ஞான சாத்திரம் பயின்றவர்களும், மூவேடனை நீத்தவர்களும், ஞானவுணர்ச்சி யடைந்தவர்களும், தவம் புரிந்தவர்களும், திரிபுடியற்றவர்களும் சிவமாந்தன்மை யடைந்தவர்களும் அடையும் பூமிகளாம்.

சர்வ சங்கப் பரித்தியாகி

நிராசையின் நிதரிசனச் சொரூபர்

இவ்விதம் சுவாமிகள் சகலத்தையும் விட்டுவிட்ட சர்வ சங்கப் பரித்தியாகியாக, நிராசையின் நிதரிசனச் சொரூபராகக், கிடைக்கற்கரிய பதவியைத் துறந்து, எதிர்பாராது வெளியேறிய நிலையினைக் கண்ட மடத்துச் சீடர்களும், அன்பர்களும் பெருங்கவலையையும், பேரதிர்ச்சியையும் பெற்றவர்களாக, "இஃதென்ன தர்ம சங்கடமாக இருக்கின்றதே, அடுத்தவேளை உணவுக்கோ, வழிச்செலவிக்கோ வகை செய்து கொள்ளாமல் செல்கின்றார்களே" என வருந்தி வாய்புதைந்து நின்றனர்.

இவ்வாறு வருந்தி நின்ற அடியவர்கள் நிலையினை உணர்ந்த சுவாமிகள், "மேயச்செல்கின்ற மாடு தனது கொம்பிலே, புல்லைக் கட்டிக்கொண்டா மேயச் செல்கின்றது". அதுபோலப், "பிரமானந்தத்தை நாடிச் செல்லும் பற்றற்ற ஞானிகட்குப் பரம்பொருள் வேண்டியதை அவ்வப்போது அருளும்' இதனை பொருட்டாக யாரும் எவ்வித கவலையும், முயற்சியும் கொள்ளத் தேவையில்லை யெனச் சமாதானம் சொல்லிப் புறப்பட்டார்கள்.

அண்ணாமலையே அழுதது-ரமணரின் வருத்தம்.

சுவாமிகள் ஈசான்ய மடத்தின் பொறுப்பைத் துறந்து வெளியேறிய செய்தியானது. காட்டுத் தீ பரவுவது போல, அண்ணாமலை வாழ் மக்கட்கும், அதனைச் சுற்றிப் பல பகுதிகளிலும் வாழும் மக்கட்கும், வெகு விரைவில் பரவி விட்டது. அனைவரும் வருந்தினர். 'நமது சுவாமிகள் ஈசானிய மடத்தை விட்டுப் போய்விட்டதால், தீபமில்லா வீட்டையும் அரசனில்லா நாட்டையும், சந்திரனில்லா வானத்தையும் போல ஆகிவிட நேர்ந்து விட்டதே' யெனக் கதறியழுது கண்ணீர் விட்டனர்.

சுவாமிகள் பால் பேரன்புடைய ஸ்ரீ ரமண மகரிஷிகள், இந்தத் தகவலையறிந்த அளவிலே அதிர்ச்சியுற்று, "நாம் திருவண்ணாமலையிலிருந்த ஒப்பற்ற மாணிக்கத்தை இழந்தோமென" 'நா' தழு தழுக்கக் கூறி வருந்தினா ரென்றால் சுவாமிகளின் துறவறப் பெருமையினை நம்மால் விவரித்து எழுதவுங் கூடுமோ? எண்ணவுந் தகுமோ?

ஈசானியமடம், சுவாமிகள் வெளியேறியதால், மாலுமியை இழந்த மரக்கலம் போல சோபையிழந்து வெறிச்சோடியது. பெற்ற தாயினும மேலாகப் பேரன்பு பாராட்டிப், பேருள ஆசானாக இருந்து பெரும்பொருளைப் போதித்துத் தங்களைக் காத்து வந்த தயா மூர்த்தியைப் பிரிந்த சீடர்கள் செய்வதறியாது, தாயினைப் பிரிந்த கன்றினைப் போலத் திகைத்து, ஆற்றாத்துயரத்தில் ஆழ்ந்திருந்தனர்.

அண்ணாமலைப் பிள்ளையின் அகலா அன்பு

திருவண்ணாமலையில் வசித்த காங்கிரஸ் தியாகி திரு.அண்ணாமலைப்பிள்ளை அவர்கள், தமிழகமெங்கும் அறிமுகமான அரசியல்வாதி. அவருக்கு நம் சுவாமிகளிடம் நீண்ட காலமாகப் பழக்கமும், அளவற்ற அன்பும் உண்டு. அடிக்கடி சுவாமிகளைத் தரிசித்து அளவளாவுவார். அறிவுரைகள் பெறுவார்.

தேச விடுதலைப் போராட்டங்களில் பிள்ளை அவர்கள் பங்கு பெற்றுப் பலமுறை, சிறைவாசம் பெற்ற செம்மல். சிறைக்குச் செல்லும் பொழுதெல்லாம் சுவாமிகளிடம் ஆசி பெற்றே செல்வார். சிறையிலிருந்து விடுதலை பெற்று வீடு திரும்பும் பொழுதெல்லாம், சுவாமிகளை வணங்கி வாழ்த்துப் பெற்றே இல்லம் சேர்வார். அத்ததை ஈடுபாடு.

சுவாமிகள், ஈசானிய மட மடாதிபத்தியத்தைத் துறந்து வெளியேறும் பொழுது திரு அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் வேலூர் துறப்பாடி சிறையில் இருந்து

வந்தார். எதிர்பாராத விதமாக அன்றே சிறையிலிருந்து விடுதலை பெற்று வழக்கம் போல, ஈசானிய மடம் சேர்ந்தார். சுவாமிகள் தலைமைப்பொறுப்பைத் துறந்து, ரயில் நிலையம் சென்று கொண்டிருப்பதை அறிந்து விரைந்து சென்று 'ரயில்' நிலையம் அடைந்தார்.

அவ்வமயம் சுவாமிகள் செல்லும் 'ரயில்' புறப்பட மணியும் அடிக்கப்பட்டு, வண்டியும் நகருந் தருவாயிலிருந்தது. ரயில் நிலைய அதிகாரிகளிடம் அனுமதி பெற்று 'ரயிலை' நிறுத்தி அண்ணாமலைப் பிள்ளைத் தாம் கொண்டுவந்திருந்த ஆளுயர ரோஜா மாலையை சுவாமிகட்குச் சூட்டி அடிவணங்கி ஆசிபெற்று, மீலாத்துயரத்துடன், பிரியா விடை பெற்றனர். இதனால் 'ரயில்' சில நிமிடங்கள் தாமதித்தது.

அகமுக வணக்கமும், நன்றிப்பெருக்கமும்.

அண்ணாமலைச் சிகரமானது தமது பார்வைக்கு மறையும் வரையில் சுவாமிகள் 'ரயிலில்' நின்றபடியே, அண்ணாமலைக்கு 'அரோஹரா' என வாழ்த்தி வணங்கினர். கடந்த கால நினைவுகள் மனதுக்குள் எழுந்தன. அன்று தம்மை 'வா' வென்று அழைத்து வாழ்வழித்த அண்ணா மலையையும், தமக்கு அடைக்கலம் தந்து தற்காத்து வந்த ஸ்ரீ உண்ணாமுலை அம்பிகை உடனாகிய ஸ்ரீ அண்ணா மலை நாதரையும், தமக்கு பீடந்தந்து பெருமையளித்த ஞானகுரு ஸ்ரீ மகாதேவ ஞான தேசிக சுவாமிகளையும், மடத்தின் ஆதிகுரு மூர்த்தியாகிய ஸ்ரீ ஈசான ஞான தேசிக சுவாமிகளையும், நன்றிப்பெருக்குடன் தமது மனதுக்குள் நினைந்து அகமுக வணக்கம் புரிந்து சென்றனர்.

குருகைங்கர்யம் - கடமையுணர்வு

திருவண்ணாமலை எல்லையைக் கடந்தவுடன் சுவாமிகட்குத் தமது அருட்குரு நாதருக்கு உடனடியாகத் தாமாற்ற வேண்டிய பெருங் கடமையுணர்வு நினைவுக்கு

வந்தது. அதுபோது (26-6-1947ல்) பரிபூரணமாகிக் கோவிலூரில் விதேகத் கைவல்யச் சமாதியாகயிருந்த ஸ்ரீ மத்-மகாதேவ ஞான தேசிக சுவாமிகளின் சமாதி அதிட்டானத்தைத் திருப்பணிசெய்து குடமுழுக்கும் செய்யவேண்டியதின் அவசியத்தினை உணர்ந்தார்கள்; குரு கடமையாற்றக் கோவிலூர் சென்றடைந்தார்கள்.

கோவிலூர் மடமும் கும்பாபிடேக வைபவமும்.

ஆதி ஸ்ரீ சங்கர பகவத் பாதாளின் சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடப் பரம்பரையைச் சார்ந்த, ஸ்ரீ முத்தி ராமலிங்க ஞான தேசிக சுவாமிகளால் அமைக்கப்பெற்றது, ஸ்ரீ கோவிலூர் வேதாந்த மடம். இம்மடம் காரைக்குடிக்கு அண்மையில் உள்ளது. தமிழகத்தில் அத்வைத வேதாந்த ஞானபோதனா மடமாகவுள்ள வரலாற்றுப்புகழ் மிக்க இம்மடத்தில், அன்று முதல் இன்று வரையில், சீரிய குருமார்களது தலைமையின் கீழ், அநேக ஞானத் தபோதனர்கள், அத்வைத வேதாந்த ஞான சாத்திரங்களைப் பாடமுறையாகப் பயின்று, பிரம்ம ஞான ஆன்மானுபூதி பெற்றுத் தமிழகமெங்கும் அத்வைத வேதாந்த ஞானத்தை பரப்பி வந்துள்ளனர்.

திருமுறைப் பாடல்கள் பலபெற்றச் சிவாலயங்கள் பலவற்றின் திருப்பணிகள் பலபுரிந்து, "சிவநேயச் செல்வர்களெனச்" சிறப்புப் பட்டத்திற்குத் தங்கள் சமூகத்தினரை உரியவர்களாக ஆக்கிக்கொண்ட, நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டியார்களால், இம்மடமும் உருபெற்று, ஆதரிக்கப்பட்டு வருகின்றது. அநேக வேதாந்த ஞான மடங்களும் கோவிலூர் மடத்தின் கிளை மடங்களாக உள்ளன.

கோவிலூரையடைந்த சுவாமிகள், அதுபோது திருக்களர் ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் மடாலயத்தலைவராக இருந்த, தவத்திரு கிருஷ்ணானந்த சுவாமிகளோடு சேர்ந்து, தமது குருதேவரின் சாமாதிக் கோயிலைத் திருப்பணி செய்து, கும்பாபிடேக பெருஞ்சாந்தி

விழாவினையும் சிறப்புற உடனிருந்து நடத்தி, பெருமகிழ்வெய்தி குருவருளுக்கு நீங்காப் புகழ் பெற்றார்கள்.

அம்பாசமுத்திரம் ஆத்மானந்தர் மடம்.

பின்னர் சுவாமிகளின் அம்பாசமுத்திரம் அன்பர்கள் அழைப்பிற்கிணங்க அங்கு சென்று ஸ்ரீ ஆத்மானந்த சுவாமிகள் மடத்தில் தங்கி அடியவர்கட்கு ஸ்ரீ பிரம்ம கீதை முழுமையையும் பாடஞ் சொல்லிப் பூர்த்தி செய்து அனைவரையும் மகிழ்வித்தார்கள். அன்பர்களால் தெய்வ ஆராதனைப் போலத் திருவடிப்பூசையும், மகேஸ்வரப் பூசையும் செய்து சிறப்பிக்கப் பெற்றனர். அதுபோது அம்மடத்தின் பொறுப்பும் சுவாமிகளிடம் இருந்ததைத் தமது சீடர்களில் சிறந்தோராகிய ஸ்ரீ சின்மயானந்த சுவாமிகளிடம் ஒப்புவித்து தற்சுதந்திரராயினர்.

"ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரங்
கடந்தேழாம் யோக பூமி
நின்றுதெளிந் தவர்பேரா மௌனநியா
யத்தைநிறை நிறைவைத் தன்னை
அன்றியொரு பொருளிலதாய் எப்பொருட்குந்
தான்முதலாய் அசல மாகி
என்றுமுள்ள இன்பத்தைந் தண்ணென்ற
சாந்தபத இயற்கை தன்னை".

-தாயுமானவர்

பரார்த்தமாக இனித்தாம் உலகியலில் ஆற்றவேண்டிய பணிகள் நிறைவேறியதாகவும், ஆத்மார்த்தமாக இனித்தாம் அடைய வேண்டிய "ஜீவன் முக்தி" ஆனந்தத்தைப் பெருவதே எஞ்சியுள தெனத் தீர்மானித்தனர். தனித்திருந்து தவமியற்ற தக்கதோர் இடத்தை யடையத் திட்டமிட்டார்கள்.

— — — — —

உ

சிவமயம்

ஓம்.ஸ்ரீ.பரப்பிரம்மணே நம :

காரியானூரர்.

ஸ்ரீலஸ்ரீநடேச ஞானதேசிக சுவாமிகள்.

வரலாறு-இரண்டாம் பாகம்.

காரியானூர் வாழ்க்கைப் பகுதி.

"பிரமனரி யீசனன ஆயைப னிருவாண பிட்சை கேட்ப
வரனைநினைந் தவளவரை நீர்தெளித்து மகவாக்கி
வளர்க்கப்பாலீந்
தரனையுமை யம்மைதவம் புரிந்தருச்சித் திறைவனை
மீண்டடைந்த திந்தப்
பரமமெனு மாதிதுறை தலமெனவே நந்திசர் பகர்ந்தாரன்றே".

– தல வரலாற்றுப் பாடல்.

(பொருள்) பிரம்ம, விஷ்ணு, ருத்திரன் மூவரும் அனுசூயை யிடம் (கற்பைச் சோதிக்க) நிர்வாண பிட்சை கேட்க, அவள் தனது கணவரை நினைந்து, அம்மூவர்கள் மீதும் நீர்தெளித்துக் குழந்தைகளாக்கிப் பால் கொடுத்து வளர்க்க, உமாதேவியார் இவ்வாதி துறையில் தவம் புரிந்து தமது நாயகரை பழைய உருவமாக்கி மீண்டடைந்து இத்தலத்தி லென்பது நந்தீசர் பகன்ற வரலாறு.

காரியானூர் சேர்தலும்-சாந்தியசிரமம் தோன்றலும்.

சுவாமிகள் தமது உள்ளத்தில் விரும்பியிருந்தும், ஸ்ரீ வசிட்ட முனிவரால் பூஜிக்கப் பெற்றதும், வெள்ளாற்றின் சப்த துறைகளில் தலையாயதுமான, திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், கைகளத்தூருக்கு அண்மையில் 3 கி.மீ. தூரத்தில் உள்ளதுமான, காரியானூருக்குச் சுவாமிகள் சர்வதாரி ஆண்டு தைத் திங்கள் 15ம் நாள் 28-1-1949 தை அமாவசையன்று வந்து சேர்ந்ததார்கள்.

அவ்வூரில் பரம்பரைச் சைவ மெய்யன்பர்களான உடையார் குலப்பெருமக்கள், முன்னரே சுவாமிகளிடம் பழக்கமும் பக்தியுமுடையவர்கள். அவர்களுக்கும் எதிர்பாராத வகையில் சுவாமிகள் காரியானூர் வந்ததானது, 'திருவருளின்றி வருந்தியழைத்தாலும் வராத அருட் செல்வமானது; திருவருளால் தாமாக வந்தடைந்ததைப் போல்' மகிழ்ந்து வரவேற்றனர். காரியானூருக்கே மகுடம் போன்றதும் மேட்டுப் பாங்கானதுமான தனித்த அமைதியான இடத்தில், இயற்கை எழில் சூழ்ந்த வெள்ளாற்றங்கரையின் தபோவனத்தில் முன்னதாக அவர்கள் அமைத்திருந்த திருமடத்தில் சுவாமிகளை அன்புடன் எழுந்தருளச் செய்தனர்.

காரியானூர் வாசிகள் அன்புடன் அளித்த அம்மடத்திற்கு "சாந்தியாசிரமம்" எனச் சுவாமிகளால் பெயர் சூட்டப் பெற்றது. சாதுக்கள் தங்குவதற்குத் தனியான விடுதியும், கிணறு ஒன்றும், நந்நவனமும், கோசாலையும், அடுத்தடுத்து அவ்வூர்ப் பொதுமக்கள் அமைத்துதவினர்.

அமைதித்தலமும் - ஆத்ம சாந்தியும்.

காரியானூர், சுவாமிகளின் வாசத்தால் அருட்பொலிவுடன் விளங்கியது. 'சாந்தியாச்சிரமம்' வங்கத்தின் தேசியக் கவிஞர் ஸ்ரீ ரவீந்தர்நாததாகூரின் 'சாந்திநிகேதனம்' போலக் காட்சியளித்தது. இயற்கை எழிலும், ஏகாந்த வாசமும் ஞான வாழ்விற்குப் பேருதவியாக இருந்தமையால், சுவாமிகள் பெரிதும் மன அமைதியுற்றுத் தனித்திருந்து நிட்டை கூடி, ஆன்ம ஞான இன்ப உணர்வுகளிர திளைத்திருந்தார்கள். ஒய்வு நேரங்களில் அறிவு நூல்களைத் ஆராய்ச்சிகள் செய்யவும், புதிய நூல்களை இயற்றவும், உரைகள் எழுதவும், மொழி பெயர்க்கவும் தக்கதோர் அமைதியான சூழ்நிலை ஆங்கு அமைந்திருந்தது.

பகைமை தீர்ந்தது - நேயம் வளர்ந்தது.

காரியானூர் வாசிகள் நீண்டகாலமாகவே தங்களுக்குள், வேண்டாத பகைமையை வளர்த்துக் கொண்டு, விரோதிகளாகி இரண்டு பிரிவினராக காட்சி புரிந்து வீண் கலவரங்களிலும்-வெற்று வழக்குகளிலும், அவர்களது காலத்தினையும், பொருளினையும் விரயமாக்கி அமைதியின்றி வாழ்ந்து வந்தனர்.

சாந்தகுணாலய சற்குரு மூர்த்தியாகிய சுவாமிகளே "சாந்தியாச்சிரமத்தில்" அன்றாடம் அவர்கள் வந்து தரிசிக்கத் தொடங்கியதிலிருந்து, (அவர்களிடம் சமாதானம் பெற்று ஒற்றுமையாக வாழுங்களென்று சுவாமிகள் சொல்லாமலேயே) சிறுகச் சிறுகத் தங்களுக்குள்ளிருந்த பகைமை உணர்வை மறந்து, நாளா வட்டத்தில் நேசமுடன் ஒற்றுமையாக வாழலாயினர்.

'கானக மிலங்கு புலி பசுவோடு குலாவு நின்கண்கான' என தாயுமானார் கூறியாங்கு நமது சுவாமிகளது சந்நதியில் புலியும், பசுவும் ஓரிடத்தே சாந்தமாய் வாழுமென்றால், ஆறறிவு பெற்ற மானிடர்கள் ஒன்று படுவதில் ஆச்சரியம் இல்லை யல்லவா? அவர்கள்தங்களுக்குள் ஒன்றுபட்டதால் காரியானூர்அமைதியுற்று வளர்ச்சியடைந்தது. நெடுங்கால மாகத் தீராதிருந்த பலப் பொதுப் பிரச்சனைகளும் சுமூகமாகத் தீர்ந்தன.

ஆரம்பத் தொண்டு - ஆலயத் திருப்பணி.

இவ்வண்ணம் ஒன்றுபட்ட அவர்கள் உதவியோடு சுவாமிகள், முதற் காரியமாக ஸ்ரீ வசிட்ட முனிவரால் பூசிக்கப் பெற்றதும் ஸ்ரீ அம்பிகையால் ஆதரிக்கப் பெற்று அரனாரை அடைந்ததும், எழுதுறைகளில் முதற்றுறையாக ஆதிதுறை எனச் சிறப்புப் பெயர்பெற்றதும், தலைப்பெருமை வாய்ந்ததுமாகிய காரியானூரில் சுயம்புமூர்த்தியான ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர், ஆலயத்தைத் திருப்பணி செய்து பஞ்சமூர்த்திகட்கும் பரிவார மூர்த்திக்கும் சிறப்பாகக்

குடமுழுக்குப் பெருஞ்சாந்திப் பெருவிழாச் செய்தின் புற்றார்கள்.

'மறையாதி கலைவிதியின் மலைமகளை
மணந் தொன்றாய் மருவிநின்றும்

பொறையாதி உயர்குணத்துச் சனகாதி
முநிவர்குப் போகம் நீத்துக்

குறையாத வியமாதி யோகாந்த
மெய்ஞ்ஞானக் குருவாம் ஆதி

துறையாதி தான்தோன்றி யீசரிரு
தாட்கமலம் தொழுதல் செய்வாம்'

-நடேச சுவாமிகள் பாடல்

என்பன போன்ற பல தோத்திரப் பாமாலைகளைச் சுவாமிகள் திருவாக்கால் இயற்றிப்பாடி வழிபட்டு, உலகம் உய்யவும், எங்கணுந் தெய்வமணங் கமழவும், அறநெறியும் - ஆன்மஞானமும் பெருகவும், தலப்பெருமை யோங்கவும், வழி கோலினார்கள். இதனால் அனைவரது உள்ளமும் மகிழ்ந்தது. அருள் மழையும் பொழிந்தது.

தல வணக்கப் பாடல் - பக்தர்கள் பாராட்டு.

இக்கும்பாபிடேக பெருஞ்சாந்தி விழாவினைக்கண்டு களித்த சாதுக்களும் - சான்றோர்களும், புலவர்களும்- பக்தர்களும், பஞ்சமூர்த்திகளையும் தரிசித்துச் சுவாமிகளிடம் அருளாசி பெற்று, இவ்வரிய தொண்டினைப் புகழ்ந்து பாராட்டினர்.

அதுபோது சுவாமிகளின் அணுக்கத் தொண்டராக இருந்து, இதுபோது வாணியம்பாடி ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மடாதிபதியாக இருந்து, அருந்தொண்டாற்றி வரும் தவஞானச் செம்மல் ஸ்ரீ. மா. கோவிந்தசாமி சுவாமிகள் புகழ்ந்தேத்தியது.

உ

சிவமயம்

ஆடுதுறை என்னும் காரியானூர்

ஸ்ரீ பஞ்ச மூர்த்திகள் வணக்கம்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

நலநிறை சுவேத நதிபெரு காதி
நற்றுறை கணேசனைக் குகனைப்

பொலமுறு மேனியாதிதாந் * தோன்றி
புனிதவீ சரையறி வுயிர்க்கு

மலமற வருளும் பெரியநா யகியா
மரகத மேனியம் பிகையை

நிலவணி யிறைவ னாகுநம் நடேச
நிமலசற் குருவினைப் பணிவாம்.

* தோன்றி என்பது வினையாலனையும் பெயர்.
அறிவு அருமென வியையும்.

ஆச்சிரம அன்றாட நிகழ்ச்சி நிரல்.

சுவாமிகள் இரவு இரண்டு மணிக்கெல்லாம் நித்திரை விட்டெழுந்து நிட்டை கூடுவதும், விடியற்காலையில் கங்கைக்கு நிகரான வெள்ளாற்றில் நீராடுவதும், நித்திய கர்மாநுட்டங்களை முடித்து, ஆத்மார்த்தமாக இறையருளை நினைத்து தோத்தரித்திருப்பதும், உச்சிப்பொழுதில் அடியார்களுடன் இல்லங்களுக்குச் சென்று பிட்சை ஏற்பதும், பிட்சான்னத்தினை சாதுக்களுக்கும், அன்பர்களுக்கும் பகிர்ந்தளித்துத் தாமும் அவ்வன்னத்தில் சிறிது உண்டு பின்னர் ஓய்வெடுப்பர்.

மாலை மூன்று மணிக்கெல்லாம் சாதுக்களுக்கும் அன்பர்கட்கும் நீதி நூல்களையும், ஞான சாத்திரங்களையும் போதனைகளாக சொல்லுவதும், மாலையில் ஸ்ரீ தான்தோன்றி ஈசுவரர் ஆலயத்திற்கு அடியார்களுடன் சென்று வழிபாடு செய்து வருவதும், இரவு உணவுக்குப் பின்னர் நிட்டை கூடி யிருந்து பின் நித்திரை செய்வதுமாக

வரையரை செய்து அமைதியாகக் காலங் கழித்தார்கள்.

பிட்சாடன மூர்த்தியின் பவனிக்காட்சி.

சுவாமிகள் நாள்தோறும் உச்சிப் பொழுதில் அடியார்களுடன் ஆதிசங்கரரருளிய 'அச்சர மாலை'யை ஓதியவாறு பிட்சையேற்கத் தெருவுக்குள் வரும் பக்திப்பூர்வமான அருட்காட்சி மறக்க வொண்ணாதது. முழுமுதற் கடவுளான பரமசிவனே சிவகணங்களுடன் பிட்சாடன மூர்த்தியாக பவனி வருவது போலத் தோற்றமளிக்கும். இப்புனிதக் காட்சியைப் பார்த்தனுபவிக்கும் பெரும் பேறு காரியானூர் வாசிகளுக்குப் பல ஆண்டுகள் கிடைத்தது.

பிட்சை அளிக்கும் தெருவாசிகளும் பாலையப்பட்டுப் பரம்பரைச் சைவ உடையார்குலப் பெருமக்களாதலால், மிகுந்த தூய்மையுடன் சமையல் செய்து, பயபக்தியுடன் சுவாமிகளை முறையாக வணங்கிப் பிட்சை யளித்து, திருநீறு பெற்றுக் குருவருளுக்குப் பாத்திரராயினர். அவ்வூரிலுள்ள இரண்டு தெருக்களிலும் மாறி மாறி இன்னொரு தெரு, மறுநாள் மற்றொரு தெருவெனப் பிட்சை யேற்க வருவார்கள்.

பசியாற்றுவிக்கும்-பாங்கும் பண்பும்.

அன்றாடம் பெற்றிருந்த பிட்சான்னத்தையே, ஆச்சிரம விடுதியில் சாதுக்களுக்கும், அடியார்கட்கும் அவரவர்கள் விரும்பிய உணவை நிரம்பவுண்ணச்செய்து சமத்துவமாக அமர்ந்து அதில் தாம் சிறிது உணவே உட்கொள்வார்கள். சுயநலம் சிறிதுமின்றி பிறர் உண்டு உவகை பூத்தலைக் கண்டுஉளம் பூரிப்பர். பசியாற்றுவிக்கும் நற்பணியினை சுவாமிகள் ஈசானிய மடத்தில் நிறைவேற்றியது போலவே சாந்தியாச்சிரமத்திலும் இன்றியமையாக் கடமையாக ஏற்றிருந்தார்கள்.

அன்னபூரணியின் அருட்கடாட்சம்.

சுவாமிகள் முதன் முறையாகப் பிட்சை ஏற்கத் தொடங்கியபோது, தெருவின் முன்வீட்டுக்காரர் சாதாரண குடும்பத்தாராக இருந்தமையால், மிகுந்த பிரயாசையுடன் பிட்சான்னம் தாயாரித்து இட்டனர். இதனைத் தமது உள்ளுணர்வினாலறிந்த சுவாமிகள் அவ்வில்லத்தினிடம், "இதன் பொருட்டாக ஏன் இத்தனை முயற்சியும் சிரமும் ஏற்கிறீர்கள். வழக்கமான உங்களது அன்றாட உணவே எங்களுக்கும் பொருந்துமே" என்று கனிந்து அறிவுரை கூறி அவர்களது அன்பினைப் பாராட்டிச் சென்றார். அதுமுதலாக இவ்வில்லத்தினர் ஸ்ரீ அன்னபூரணியின் அருட்கடாட்சம் பெற்றவர்களாய் குடும்ப விருத்தியாக வாழ்ந்து வருகின்றனர்.

இச்சம்பவத்தினால், அன்றொருநாள் ஸ்ரீ ஆதிசங்கர குரு பிட்சைக்குப் போனபோது, வறுமையால் வாடிய இல்லத்தார் சங்கர குருவிற்கு இடும் பிட்சைப் பொருள்யாதொன்றும் இல்லாமையால், மனம் வருந்தி ஒரு நெல்லிக்கனியை அன்புடன் பிட்சையாக அளித்ததும், அதனை சங்கரகுரு உண்டு; அவர்கள் நிலைக்கு மனமிரங்கி ஸ்ரீ லட்சுமிதேவியைக் குறித்துக் 'கனக தாரை' யென்ற ஸ்ரீ கனகதாரா தோத்திரத்தைத் துதி செய்து, அவ்வீடு நிரம்ப நெல்லிக்கனி போன்ற பொற்கனிகளைப் பொன்மாரியாகப் பொழிய வைத்ததும், இங்கு நமது நினைவிற்கு வருகின்றது.

தாயினுமிக்க தயையுடைய தாங்கம்மாள்.

காரியானூரிலுள்ள இல்லறத்தார்கள் அனைவரும் சுவாமிகளைத் தங்கள் குலகுருவாக ஏற்று பேரன்புடன் ஆதரித்துப் பெரும் பயன் அடைந்தனர். பலருக்கும் நோய் நீக்கம், புத்திரப்பேறு, துக்க நிவர்த்தி, இட்ட சித்தி திருவருட்பேறு முதலியன ஏற்பட்டன. திரு. சு.சிதம்பர உடையாரும், திரு. சு.கிருஷ்ணசாமி உடையாரும் இரட்டையர் போன்ற உடன் பிறந்த சகோதரர்கள்

இவர்களிருவக்கும் சுவாமிகளின் அணுக்கத்தொண்டர்களாக இருந்து அரும்பணியாற்றினர் என்றால் மிகையாகாது. திரு. சு.கிருஷ்ணசாமி உடையாரின் மனைவி 'தங்கம்மாள்' பதிவிரதா பக்த சிரோமணியாகவும், சாது சங்கம பத்தியில் சிறந்தும் தயாவுள்ளம் மிகுந்தவர்களாகவும் இருந்தனர்.

திருவண்ணாமலையில் ஸ்ரீ ரமண முனிவரிடம் பக்தி பூண்டு, ஆயுட்காலம் வரை அருந்தொண்டாற்றிய, காரைக்காலைச் சேர்ந்த 'அலங்காரத்தண்ணி' என்னும் 'முதலியார் பாட்டி'யைப் போலத் தங்கம்மாள் சுவாமிகளிடம் குரு பக்தி கொண்டு, குறிப்பறிந்து அன்றாடம் சுவாமிகளுக்கேற்ற சாத்வீக உணவுகளைத் தயாரித்தளிப்பதிலும், எந்த நேரத்திலும் சுவாமிகளைக் காண வரும் மெய்யன்பர்களுக்குத் தகுந்த உபசரிப்புகளைச் செய்வதிலும் முழுமையாகத் தொண்டாற்றினார்கள். உடல் அயராது, உளம் சலியாது ஆற்றிய இவ்வம்மையாரின் பெரும்பணி என்றென்றும் போற்றத்தக்கது.

இவ்வம்மையாருக்கு மூன்று குழந்தைகள் பிறந்தும் அவை காலமாயின. சுவாமிகளைத் தமது குழந்தைபோலவும், குருநாதராகவும் உறுதியாக ஏற்றுத் தாயினும் இனிய கருணை உள்ளத்தோடு தொண்டாற்றி; சுவாமிகளின் பேரருளுக்குப் பரிபூரணப் பாத்திரராயினர். சுவாமிகள் பரிபூரணம் ஆயின பின்பும் சமாதி ஆலயக்கடமைகளிலும், தங்கம்மாள் ஈடுபட்டுத் தமக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் நன்செய் நிலத்தையும், சுவாமிகள் சமாதி ஆலய பூசை பராமரிப்புக்காக உரிமையாக்கி விட்டனர். 1979 ம் ஆண்டில் தமது 64ம் அகவையில் தங்கம்மாள் குருநாதரின் திருவடி அடைந்தனர்.

தாய்க்குலத்திடம் பேரன்பு - தமக்குக் கட்டுப்பாடு.

தாய்மார்களிடம் சுவாமிகள் பெரு மதிப்பும், பேரன்பும் உடையவர்களாக இருந்தனர். பெண்களைப் பெயர்

குறிப்பிட்டு அழைக்காமல், 'அம்மையே' யெனவும், 'தாயே' எனவும் அழைப்பர். தாம் சந்நியாச ஆச்சிரமத்தில் இருந்நதாலும் கடுமையான நைட்டிகப் பிரம்மச்சரியத்துறவியாக வாழ்ந்ததாலும், நூல்களில் தாம் கற்றுணர்ந்தவாறே, தமக்குத் தாமே கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு பழகுவர். பிரம்மச்சரிய விரதம் காக்கும் வைராக்கியத்தில் விவேகானந்தராக விளங்கினர்.

ஓமந்தூராரின் அன்பும் - அழைப்பும்.

சென்னை மாநில முன்னாள் முதல்வரும், சிறந்த காந்தீய - சர்வோதய வாதியும், சன்மார்க்க சங்க - சாது சங்கம ஈடுபாடும் உடைய, பற்றற்ற இல்லறத்துறவியும் ஒப்பற்ற ஒழுக்க சீலருமான ஓமந்தூர் உயர்திரு. P. ராமசாமி ரெட்டியார் அவர்கள், நீண்ட காலமாகவே சுவாமிகளிடம் பழக்கம் உடையவர்கள். அன்பு மிகுதியால் காரியானூருக்கே வந்து சுவாமிகளை நேரில் கண்டு வணங்கி அளவளாவினார்.

அவர்தாம், வடலூரில் அமைந்துள்ள "வள்ளலார் குருகுலம், சான்றோர் இல்லம்", 'தியான நிலையம்' இவைகளின் நிர்வாகப் பொறுப்பையேற்று, வடலூரிலேயே தங்கிவிட வருமாறு, அன்புடன் சுவாமிகளைக் கேட்டுக்கொண்டார். சுவாமிகள் அதற்கு, "அங்குதான் கல்வி கேள்விகளிலும், யோகத்திலும், அறிவாற்றலிலும் சிறந்தவர்கள் பலரிருக் கின்றனரே, அவர்களைப் பயன்படுதலாமே" என்றனர்.

ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள், "ஆரவாரமான பலதரப்பட்ட செயல்களைச் செய்ய எங்கும் நிறையப்பேர் இருக்கின்றார்கள். ஆனால் நூல்களில் கூறியவாறு ஒழுகலாற்றினைப் பின்பற்றி நடைமுறையில் இருப்பவர்கள் மிக மிகக் குறைவு. கற்றாங்கு ஒழுகும் ஞானச் செம்மலாகிய தாங்கள் தலைமையேற்றால் குருகுல நிர்வாகம் தூய்மை பெறும்" எனக்கூறி மீண்டும் வற்புறுத்தி அழைத்தார்.

சுவாமிகள் அதற்கு, "தவத்துறையாக என் வசமிருந்த ஈசானிய மடத்தின் தலைமைப் பொறுப்பே, பெருஞ்சுமையாக இருந்ததென உணர்ந்துதான் நானே துறந்து விட்டு விட்டேன். பொதுத்துறையாக உள்ள தங்கள் வடலூர் குருகுலப் பொறுப்பையேற்பது என்பது, எனது குறிக்கோளான ஆன்ம ஞான ஆனந்தத்திற்கும், ஏகாந்தமான அமைதி வாழ்விற்கும் பெரும் இடையூறாகிவிடுமே. ஆகவே, அன்பு கூர்ந்துத் தம்மை வற்புறுத்தி அழைக்க வேண்டாம்", எனப் பதிலளித்து ஓமந்தூராரை அன்புடன் வழியனுப்பி வைத்தனர்.

நிலமும் நிதியும் வேண்டாமை.

அநேக பக்தர்கள் 'சாந்தியாச்சிரம'த்திற்கு நிலம் எழுதி வைக்கின்றோம் என்றும், நிதி உதவி அளிக்கிறோமென்றும் பலமுறை கேட்டுக்கொண்டதற்கும் சுவாமிகள் உடன்படவே இல்லை. பரம் பொருளையே நாடியிருக்கும் எங்களுக்கு வேண்டுவதை திருவருள் அவ்வப்போது அருளுமெனக்கூறி ஏற்க மறுத்து விட்டனர். இந்நிகழ்ச்சிகளால், சுவாமிகள் பதவியாசை மண்ணாசை, பொன்னாசையை யற்ற-பற்றற்ற பரமஞானி எனப் பறைசாற்றுகின்றன அன்றோ !

சித்தாச்ரமத் துறவியின் செருக்கும் சீரழிவும்.

சித்தாச்ரமத்தைச் சேர்ந்த துறவி ஒருவர் காரியானூருக்கு அண்மையிலுள்ள உறங்கூரிலிருந்து வந்து சுவாமிகளிடம் சொற்போரிடத் தொடங்கினார். "திருநீற்றினை எதற்காகப் பூசுதல் வேண்டும். உருத்திராக்கம் ஏன் அணிதல் வேண்டும்?" என்பன போன்ற கேள்விகளைக் கேட்டார். அவ்வினாக்களுக்குத் தக்க சான்றுகளுடனும், நூல்களின் மேற்கோள்களுடனும் உகந்தவாறு சுவாமிகள் பதிலளித்தனர்.

அவ்வன்பர் மனநிறைவுறாது விதண்டா வாதத்தில் இறங்கி, அர்த்தமற்ற அநேக கேள்விகளைக் கேட்டார்.

சுவாமிகள் அவரது முரட்டுத்தனமான போக்கைக் கண்டு, மறுமொழி கூறாமல் மௌனமாக இருந்து விட்டனர். இதனால் அத்துறவி சொற்போரில் தாமே (சுவாமிகளை) வென்றதாக எண்ணிச் சென்றார்.

அத்துறவிக்கு சில நாட்களில் கடுமையான காய்ச்சலேற் பட்டது. நோய் விலகாமல் ஒரு மாத காலம் படுக்கையில் கிடந்து அவதியுற்றார். மருத்துவத்துக்காகப் பெரும்பொருள் செலவிட்டுப் பின்னர், மிகுந்த தொல்லையோடு நோயிலிருந்து சிறிது விடுபட்டு, மீண்டும் சாந்தியாச்சிரமம் வந்து சேர்ந்தார்.

சுவாமிகளின் திருமுன்பு எண்வகை உறுப்புக்களையும் நிலத்தில் தோய வீழ்ந்து பணிந்து, "பெரியீர்! தங்களது பெருமையையறியாது அளவு மீறி யான் தங்களிடம் வீண்வாதம் புரிந்து விட்டேன். அதன் பலனை நுகர்ந்து அயர்ந்தேன். தங்களது திருவாக்கால் அடியேனை மன்னித்தேன் எனத் திருவாய் மலர்ந்து திருநீறு தந்தால் கடைத்தேறுவேன்" என வேண்டி நின்றார். சுவாமிகள், 'நன்றல்லது அன்றே மறப்பது நன்று' என்பதற்கேற்ப இத்துறவி உரையாடிச் செனற நிகழ்ச்சியினை அன்றே மறந்து விட்டபடியால், முன் நடந்த நிகழ்ச்சியினை மீண்டும் நினைவு படுத்திய பின்பு தெரிந்து அத்துறவிக்குத் திருநீறளித்தனர். சித்தாச்சிரமத்தைச் சேர்ந்தவர்கள் சிவச்சின்னங்களை அணிய மாட்டார்கள். பிராணாயாமம் ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டவர்கள். இந்நிகழ்ச்சி சுவாமிகளிடம் திருக்குறளில் துறவறவியலில் கூறிய

'ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்'

என்பதற்கேற்ப அமைந்திருந்ததை வெளிப்படுத்து கின்றது, அன்றே!

மகப்பேறருளிய மாட்சி-முடம் நீங்கியதும்.

* சுவாமிகளிடம் பல புதுமைகள் நிகழ்ந்தன. கை முடமாக இருந்த அன்பர் ஒருவர் பல வைத்தியங்கள் செய்தும் குணமாகாமல் சுவாமிகளைப் பணிந்து திருநீறு பெற்று வந்து சில நாளில் முடம் நீங்கிச் சுகமானார்.

* சேலம் நகர் அம்மாப்பேட்டையைச் சேர்ந்த பிரபல புகையிலை வியாபாரியும், பத்திமானுமாகிய திரு. ஊ.பெ.அய்யாச்சாமி உடையார், தமக்குப் புத்திரப்பேறு உண்டா? இல்லையா? என்பதையறிய, தமது மனைவியுடன் செந்துரை மருதூரில் சித்துமாதாக விளங்கிய, அம்மாளிடம் சென்றுவர எண்ணிப்போகும் வழியில் காரியானூரில் சுவாமிகளைத் தரிசித்து ஆசி கோரினார். சுவாமிகள் அவர்களுடைய உள்ளக் கிடக்கையை யுணர்ந்து மருதூர் பிரயாணம் போக வேண்டாமெனத் தடுத்தாட்கொண்டனர்.

அதன்போது திரு. அய்யாச்சாமி உடையாரின் மனைவி திருமதி. பாப்பாத்தி அம்மாள் உடல் நலமின்றி வருந்தினார்கள். சுவாமிகள் பழங்களை அனைவருக்கும் தந்து, தனியாக ஒரு ஆரஞ்சுப் பழத்தைக் கொடுத்து "இப்பழத்தை நோயுள்ளவர் மட்டும் உண்ணவேண்டும் இப்பழத்தை மற்றப் பழங்களுடன் சேர்க்கப் படாது" எனக் கூறியருளினர்.

அப்பழத்தினை திருமதி. பாப்பாத்தி அம்மாள் பக்தியுடன் உட்கொள்ள நோயும் நீங்கிச் சுகமடைந்து, அதுவே காரணமாகக் கருத்தரித்து, அவர்களுக்குப் புத்திரப்பேறும் உண்டாகிறது. இத்தம்பதிகள் எல்லையில்லா மகிழ்வடைந்து, இன்றளவும் சுவாமிகளைத் தெய்வமாகப் பாவித்து பேரன்பு பாராட்டி வாழ்ந்து வருகின்றனர். திருப்பணி கடமைகள் நிறைவேற்றுகின்றனர். இது போன்ற பற்பல அற்புத நன்மைகள் சுவாமிகளை அணுகி நம்பிக்கையுடன் பிரார்த்தித்த மெய்யன்பர்களுக்கு அவ்வப்போது கைமேல் பலனாகக் கிடைத்தன.

அம்பிகை காட்டிய அருளாளர்.

காரியானூருக்கு மேற்கே 8 மைல் தொலைவில் ஆறகளூர் என்ற கிராமம் உள்து. இவ்வூரிலுள்ள கிராம தேவதை ஸ்ரீ பிடாரி அம்மனுக்குப் பூசை செய்து வந்த பூசாரிக்குத் திருமணமாகி 30 ஆண்டுகட்கு மேலாகியும், மகப்பேறு இல்லாமல் இருந்தது. இதனால் இப்பூசகர் பெரிதும் மனக்கவலையுடன் தாம் பூசிக்கும் பிடாரி அம்மனையே மகப்பேறு அருளுமாறு பக்தியுடன் பிரார்த்தித்து வந்தார்.

நீண்ட காலமாக வேண்டி வந்தும், தனக்குப் பிடாரி அம்மன் அருள்பாலித்துப் புத்திரப்பேறு ஏற்பட வில்லையே, என்ற மனக் கிலேசத்தால் விரக்தியுற்றிருந்த அப்பூசகர் வழக்கம் போலப் பூசையை முடித்துத் திரும்பும் போது ஒருநாள் அபிடேகம் செய்யும் குடத்தால் பிடாரி அம்மனின் தலையில் மொத்தி "உனக்கு இத்தனை காலம் பூசனை செய்துப் பிரார்த்தித்தும் எனக்கு மகப்பேறு வழங்க மணமில்லையே" என்று ஆவேசமாகக் கூறி இல்லம் சேர்ந்தார்.

அன்றிரவு ஆகாரம் முடித்து நித்திரை புரியும் போது அவர் கனவில் பிடாரி அம்மன் தோன்றி "உன் ஊருக்கு கிழக்கே தவச்சீலர் ஒருவரிருக்கின்றார்; அவரிடம் சென்று வா; உன் குறை நீங்கும்" எனக்கூறிடவே இவ்வதிசயக் கனவால் விழிப்புற்று மனைவியிடம் தாம் கண்ட கனாவைக் கூறிட, இருவரும் ஆச்சரிய முற்றவர்களாயினர்.

விடிந்ததும் நண்பர்களை விசாரித்ததில் காரியானூரில் தான் தவப் பெரியார் இருக்கிறாரெனத் தெரிந்து தகவல் தந்தவரையும் துணைக்கு அழைத்துக் கொண்டு காரியானூர் சென்றனர். சுவாமிகளை வணங்கி தம் குறைகளையும் சொல்லி கனவில் கண்டவற்றையும் கூறினர். சுவாமிகள் அவர்களுக்குத் திருநீறு தந்து அமரும்படி கூறினார்கள்.

" நீங்கள் சைவமா? அசைவமா? ' எனச் சுவாமிகள் கேட்க அவர்கள், "அசைவம்தான்" என்றனர். "ஏன் சைவமாக இருக்க இயலாதா எனக் கேட்டனர்." "சுவாமிகளின் வாக்கின்படி இனிமேல் சைவமாக இருக்கிறோம் என்றனர். மகிழ்வுற்ற சுவாமிகள் "அப்படியானால் மூன்று குருவாரங்கள் இங்கு வந்துபோங்கள்" என்றனர். அதன்படி அவர்கள் சைவமாகி மூன்று குருவாரங்கள் வந்து வணங்கி சுவாமி களிடம் விபூதிப் பிரசாதமும் நல்லாசியும் பெற்றுச் சென்றனர். அதன் பின் அத்தம்பதிகளுக்கு மூன்று குழந்தைகள் ஆண் பெண்ணாகப் பிறந்து மகிழ்வடைந்திருந்தார்கள்.

சுவாமிகளின் எதிர்கால உணர்வுகள்

* சுவாமிகளிடம் எதிர்கால உணர்வுகள் மிகுதியாக அமைந்திருந்தன. பெத்த நாயக்கன் பாளையம் திரு.சின்னப்பிள்ளை என்னும் மெய்யன்பர், ஒருசமயம் காரியானூரில் சுவாமிகளுக்குத் திருவடி பூசையும், மாகேசுவர பூசையும் செய்தனர். மாகேசுவர பூசைக்குப் பதினைந்து இலைகள் போடப்பட்டு பரிமாறும் பொழுது, சுவாமிகள் மேலும் இரண்டு இலைகளைச் சேர்த்துப் பரிமாறச் சொல்லினர். அவ்வண்ணமே பரிமாறப்பட்டது.

* மாகேசுவர பூசை முடிந்து அன்பர்கள் உண்ணத் துவங்கப் போகும் பொழுது, ஷை திரு.சின்னப்பிள்ளையின் அண்ணார் திரு. ஆறுமுகம்பிள்ளையும், மற்றொருவரும் எதிர்பாராது வந்தனர். அவர்களிருவரையும் முன்னர் அதிகமாகப் பரிமாறச் செய்திருந்த அவ்விரண்டிலைகளிலும், அமர்ந்து உண்ணக் கட்டளையிட்டனர்.

* காரியனூர் விவசாயிகள் ஒரு சமயம் மழையின்மை காரணமாக புன்செய்ப் பயிர்களை மட்டும் விதைத்திருந் தனர். பின்னால் மழையின் வருகையை முன்னாலுணர்ந்

திருந்த சுவாமிகள், நன்செய் பயிர்களையும் விதைக்கும் வண்ணம் கட்டளையிட்டார்கள். அவ்வண்ணமே விதைத்து அவ்வாண்டு பெய்த தருண மழைகளால், பயிர்கள் செழித்துப் பலன் தந்தன. பலன் பெற்ற விவசாயிகள் அனைவரும் சுவாமிகளைப் பாராட்டினர்.

* பூண்டி திரு. மெய்வராயப்பிள்ளை என்னும் மெய்யன்பர் நல்ல வேளை பார்த்துத் தம்மில்லத்திலிருந்து காலை 11 மணி அளவில் புறப்பட்டு, மாலை 5 மணிக்குள் காரியானூர் சேர்ந்தனர். அவர்களிடம் சுவாமிகள் 'காலை 11 மணிக்குப் புறப்பட்டு வந்தீர்களோ' வெனக் கேட்டு ஆச்சரியமுறச் செய்தனர்.

* ஒருநாள் நாற்காலி யொன்று கொண்டு வந்து ஆச்சிரமத்தில் வைக்குமாறு சுவாமிகள் சொல்லினர். அவ்வண்ணமே வைக்கப்பட்டது. உடனே பெத்தநாயக்கன் பாளையம் தவத்திரு. பொன்னம்பல சுவாமிகள் வந்தனர். அவர்களை வரவேற்று நாற்காலியில் அமர்ந்திடச் செய்தார்கள் பத்தாம் கிரியை வரை இருந்தார்கள்.

* காரியானூர் திரு. சு.சிதம்பர உடையார் பழனி யாத்திரை சென்று வரச், சுவாமிகளிடம் பயணம் சொல்லிக் கொண்டு ஆசி கோரினார். சுவாமிகள் "துணையாக யார் வருகின்றார்? திரு. செ. இராமசாமி உடையாரை அழைத்துப் போனால் போய்வர வசதியாக இருக்குமே" என்றனர். அதற்கு, "அவர் 'காண்ட்ராக்ட்' வேலையில் தீவிரமாக ஈடுபடுகின்றார், பெரும்பாலும் வரமாட்டார்" என்று பதில் சொன்னார்.

சுவாமிகள் திரு. செ.இராமசாமி உடையாரை அழைத்து, நீங்கள் 'சிதம்பர உடையாரை அழைத்துக் கொண்டு 'பழநி' சென்று வரலாமா" என வினவினர். அதற்கு அவர் அரசாங்க வேலையின் அவசரத்தையும், அதிகாரிகளின் கெடுபிடியையும் தெரிவித்து நின்றார். சுவாமிகள் வேலை யை நிறுத்திவிட்டு, அவசியம் துணைசென்று வாருங்கள்"

எனக் கட்டளையிட்டனர். அவர் பதிலேதும் சொல்ல இயலாது மௌனமாக வீடு சென்றார்.

மனதில் ஒருவகை எண்ணமும் எழாமல் மயக்கத்துடன் அவரிருக்கும் பொழுது, 'மறு உத்திரவு வரையில் வேலை செய்யக்கூடாது' எனத் தடையுத்திரவு ஒன்று திடீரென அரசாங்கத்தின் ஆணையாகத் தபால் மூலம் வந்து சேர்ந்தது. அதன்பின் எவ்வித சந்தேக விபரீதமும் இன்றிப் 'பழநி' யாத்திரைக்குத் துணைபோய் வந்தார். பெரிதும் ஆச்சரியமுற்றார். தடையுத்திரவின் வருகையை முன் அறிந்தே சுவாமிகள் தம்மை 'பழநி' க்குத் துணை போய்வரக் கட்டளையிட்டார்கள் போலும் என உணர்ந்தார்.

செய்யுளியற்றும் திறனும் செய்த நூல்களும்.

சுவாமிகள் நன்கு செய்யுளியற்றும் அருளாற்றல் பெற்றிருந்தனர். புளியந்துறை ஸ்ரீ விநாயர் பதிகம், ஸ்ரீ வீரமூர்க்க கற்பக விநாயகர் பதிகம், பன்னிரு தோத்திரப் பாமாலை, திருக்களர் ஸ்ரீ வீரசேகர ஞான தேசிகர் மீது திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை முதலியன பாடியும், கந்தரநுபூதிக்கு விசேடப் பொழிப்புரை வரைந்தும் அருளினர். அவ்வப்போது இயற்றிய சாற்றுக்கவிகள், வாழ்த்துப்பாக்கள் தனிப்பாடல்கள் அனந்தம்.

நூல்களை நன்காராய்ந்து பிழைகள் களைந்து, சுத்தப் பதிப்பாக்கும் திறமையும் சுவாமிகளிடம் இருந்ததால், கைவல்ய நவநீதம் உரையை நன்கு பார்வையிட்டு ஆறாம் பதிப்பை அச்சுக்குத் தந்து உதவினார்.

குறிப்பு : சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளின் கைவல்ய நவநீதம் உரையைக் கோவிலூர் மடம் பீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் உத்திரவின்படி ஈசானிய மடம் ஸ்ரீ நடேச ஞான தேசிக சுவாமிகளால் பார்வையிடப்பட்டு 1941ல் சிதம்பரம் கோ.சித.மடம் ஸ்ரீமத் சோமசுந்தர சுவாமிகளால் இந்நூல் வெளியிடப்பட்டது.

மணி விழா கண்ட மாண்பு.

சுவாமிகட்கு 60ம் வயது நிரம்புவதை அறிந்த அன்பர்கள் சிறப்பான முறையில் மணிவிழாக் கொண்டாட முயன்றனர். இதனையுணர்ந்த சுவாமிகள் தமக்கு இப்படியொருசிறப்பு நிகழ்ச்சி தேவையே யில்லை. வேண்டுமானால், இந்நாட்களில் இறை வழிபாடும், ஞானிகள் அறிவுரைகளைச் சிந்தித்தலும், ஏழை எளியோர்க்குப் பசியாற்று வித்தலும் தகும் எனக் கூறி அமைதிப்படுத்தினார்கள்.

சுவாமிகள் விருப்பிற்கிணங்க ஆடம்பரமில்லாமல் மணிவிழாவினை அன்பர்கள் சாந்தியாச்சிரமத்தில் விளம்பி யாண்டு புரட்டாசித் திங்கள் 10ம் நாள் வெள்ளிக்கிழமை 26-9-1958ல் கொண்டாடி மகிழ்வுற்றனர். அன்று நடராசப்பெருமான் அபிடேக நாளானபடியால், கூத்தப் பெருமானுக்கும், காரியானூர் ஆலயத்தில் பஞ்சமூர்த்திகளுக்கும் சிறப்பு அபிடேக ஆராதனைகளைச் செய்து, நடேசப் பெருமானாகிய நம் சுவாமிகட்கு திருவடிப்பூசையும், மகேசுவர பூசையையும் செய்து சுவாமிகளின் நல்லாசியும் திருநீறும் பெற்றின்புற்றனர். அதன்போது சேலம் மாவட்டம், ஆத்தூர் தலைவாசலைச் சார்ந்த அம்மையகரம் மேல் நிலைப்பள்ளி தமிழாசிரியரும் சுவாமிகள்சீடருமான புலவர் திரு. செ.வடிவேலு அவர்கள் சுவாமிகளுக்கு வாசித்தளித்த மணிவிழா வாழ்த்து மலர்.

நேரிசை யாசிரியப்பா.

"காரணி மிடற்றெம் கண்ணுதல் அருளால்
சீரணி உலகம் திருந்திடற் கெண்ணி
யாரெனத் தம்மை அறிகிலா மாக்கள்
ஏருறு முத்தி யெழிற்பதம் அடைய
குருவெனப் போந்தே குவலயந் தன்னில்

கருவறு நிலையினைக் காட்டுதற் காக
மானுடச் சட்டை மாண்புடன் கொண்டு
ஊனுடைப் பற்றை உவர்ந்து விடுத்து
நடேச முனியெனும் ஞானவா சானாய்
வந்தனன் அம்ம ! வந்தனன் அம்ம ! அன்னான்

விளம்பி என்னும் வியன்றிரு ஆண்டில்
நற்புரட் டாசி நன்னாள் பத்தில்
பூரட் டாதிப் புண்ணிய வோரையில்
தெள்ளியோர் போற்றும் வெள்ளி நன்னாளில்
அறுப தாகிய அகவையுற் றனனால்

என்றும் அழியா எழில் ஆனந்தம்
ஒன்றும் வகையெமக் குவப்புடன் ஈந்தே
மணி விழாக் கொண்ட வண்குரு பரனிவன்
வாழியர் பெரிதே வாழியர் பெரிதே
ஊழி பலவா வாழியர் பெரிதே.

ஸ்ரீ சங்கர ஜயந்தி கொண்டாடி மகிழ்வீர்.

ஸ்ரீ ஆதி சங்கரருடைய அவதார தினமானது, இந்திய நாட்டில் ஹிந்துக்களின் இரத்தத்தோடு கலந்து விட்டிருக்கும் ஒரு புனித தினமாகும். எப்போதோ ஏதோ வேறொரு யுகத்தில் தோன்றிய, ஸ்ரீ ராமபிரானுக்கு ஸ்ரீராம நவமியையும், ஸ்ரீ கண்ணபிரானுக்கு ஸ்ரீ ஜன்மாஷ்டமியையும், நாம் இப்போதும் ஒவ்வோராண்டும் கொண்டாடி மகிழ்கின்றோம்.

தெய்வம் மனிதராகப் பிறந்து, மனிதர்களோடு வாழ்ந்து, மனிதன் மிருகமாக மாறாமலிருக்கும் பொருட்டுத், துட்ட நிக்ரக சிட்ட பரிபாலனம் செய்த, பரந்தாமனின் பத்து அவதாரங்களில், ஸ்ரீ ராமாவதாமும், ஸ்ரீ கிருஷ்ணாவதாரமும் இன்றியமையாத, நமது இதய கமலத்தில் நிரந்தர இடம் பெற்றிருக்கும் இரு பெரும் அவதாரங்களாகும்.

இந்த இரண்டு அவதாரங்கட்கும், இம்மியளவும் குறையாத முக்கியத்துவம் உடைய, சரிசமம் வாய்ந்த

அவதாரமே, ஆதி-ஸ்ரீ-சங்கர பகவத் பாதாள் அவதாரமாகும். பரமேசுவரனாகவும், சங்கரனாகவும், சதாசிவ மாகவும், புராண இதிகாசங்களும், வேத உபநிடதங்களும் விவரிக்கும் மேலான ப்ரம்பொருளான - பெரும் பொருளாகவும், விராட் புருடனாகவும், நாம் வழிபடும் சர்வ மங்களத்தையும் தரும் ஸ்ரீ சிவ சங்கரனே ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதாளராக 'பரசுராம க்ஷேத்திரம்' என்னும் கேரள பூமியில், 'காலடி' என்னும் புனிதத் தலத்தில் திரு அவதாரம் ஆனார்கள்.

ஆதி- சங்கர பகவத் பாதாச்சாரியார் துதி

பொங்கராப் பிறைமுக் கண்ணும் புனிதமா மகிமை தங்குங்
கங்கைநீ ரதுவும் வேய்ந்த கடவுளே கருணை கூர்ந்து
இங்குளா ரெவருமுய்ய விறைவனா யவத ரித்த
சங்கரா சார்ய நற்றா டலைமிசை யணிகின் றேனே.

பொங்கருண் ஞான ங்கள் புண்ணிய மனைத்து மொன்றாய்
அங்குபுல் லென்ன வந்தாண் டருமறைப் பொருளையார்க்கும்
அங்கையின் நெல்லி போல வளித்தரு ளமலா னந்த
சங்கர பகவற் பாதந் தாண்மலர் நந்த லைக்கே.

- ஸ்ரீ கோவிலூர் மரபு வழிப்பாடல்.

ஹிந்துக்களுக்கு ஷண்மதங்களையும் ஸ்தாபித்து, அவைகட்கு ஆதாரமான பிரம்ம வித்தையென்னும், அத்துவித சித்தாந்தத்தை நிலைநிறுத்தி அவற்றைப் பரப்ப நான்கு ஆச்சாரிய பீடங்களையும் அமைத்த, அருட்குரு மூர்த்தியான ஸ்ரீ ஆதி-சங்கரிடம் சுவாமிகளுக்கு அறவற்ற நீங்காத அன்பும், பக்தியும், ஈடுபாடும் உண்டு. ஆண்டுகள் தோறும் வைசாக பஞ்சமி பென்னும், சித்திரை மாதம் பஞ்சமி திதியில் சாந்தியாச்சிரமத்தில் சுவாமிகள், தமது சக்திக் கேற்றவாறு ஸ்ரீ சங்கர குரு ஜெயந்தியைக் கொண்டாடி மகிழ்வார்கள்.

ஸ்ரீ சங்கரருக்குப்பின் தோன்றிய இதர மதத் தலைவர் கட்கு, ஸ்ரீ சங்கரருக்கு அடுத்தபடி தான் இடம் ஒதுக்கப்பட வேண்டுமென்பதையும்; அரசாங்கம் 'மஹாவீர் ஜயந்தி',

'புத்த ஜயந்தி' என்று அங்கீகரித்து அவற்றைக் கொண்டாட விடுமுறை அளிப்பது போலவே, ஸ்ரீ சங்கர ஜயந்தியையும் கொண்டாட மத்திய அரசு விடுமுறை அளிக்க வேண்டுமென்பதும் சுவாமிகள் விருப்பம்.

இந்துக்கள் என்றிருப்போர் உலகில் எக்கெங்கிருப் பினும், அனைவரும் விருப்பு வெறுப்பின்றி, 'ஸ்ரீ சங்கர ஜயந்தி' யின் முக்கியத்துவத்தையுணர்ந்து, தவறாமல் ஆண்டுகள் தோறும் கொண்டாட வேண்டுமெனவும், அவரது ஆதாரபூர்வமான மூலாதார அத்துவிதப் போதனை களை, எங்கணும் பறைசாற்றி வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் , சுவாமிகள் கோருவர்.

வேதாந்திகளே ! சித்தாந்திகளே !
தாயுமானாரை நினைமின்.

ஸ்ரீ தாயுமானவ சுவாமிகள் துதி

வாயுஆ ணவமலமும் மறுபிறப்புந்
துறவறந்தான் மாற வீசி
பாயும்வே தாகமத்தின் அருள்வலியிற்
சிவஞான வாழி மூழ்கிப்
பாயுமால் விடைப்பரமன் இருவியலும்
பார்த்துணர்ந்து பதத்தில் ஒன்றும்
தாயுமா னவன்றன்இரு சரணமலர்
சிரமதனில் தரித்து வாழ்வாம்.

சுவாமிகளுக்குத் தவத்திரு ஸ்ரீ தாயுமான சுவாமிகளிடம் எல்லையற்ற தனித்த பேரன்பும், அவர்கள் தமது பாடல்களில் அதிக ஈடுபாடும் உண்டு. தாயுமானார் பாடல்களை என்புருகப்பாடி, மெய்மறந்து அசைவற்றிருப்பர்.

குறிப்பு : இரு இயல் ஆவன :- தடத்த லக்கணம் - சாரூப லக்கணம் என்பனவாம். இவை முறையே பொது வியல்பு- சிறப்பியல்பு எனவும் கூறப்படும்.

"சந்ததமும் எனது செயல் நினது செயல் யானெனுந்
தன்மை நினையன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவம் இதுவே"

–பரிபூரணானந்த 5 ஆம் செய்யுள்.

என்பன போன்ற பாடல்களுக்கேற்ப, சைவசமய சித்தாந்தக் கருத்துக்களுக்கும், அத்துவித வேதாந்த ஞானக்கருத்துக்களுக்கும், சமரசம் காணவும், சைவ சமயம் தழைக்கவும், அத்துவித வேதாந்த ஞானம் சிறக்கவும், தமிழகத்தில் தவயோக ஞானி. ஸ்ரீ தாயுமானார் செய்த பெருந்தொண்டு என்றென்றும் எல்லோராலும் போற்றிப் புகழ்தற்குரிய தெனவும், தமிழர்கள் யாவரும் ஸ்ரீ தாயுமாவன வர் பாடல்களில் தோய்ந்துணர்ந்து பிம்மஞானம் பெற வேண்டும் எனவும் சுவாமிகள், சித்தாந்திகளிடமும் வேதாந்தி களிடமும் அவர்களை காணுந்தோறும் சொல்வர்.

'புராதனமெய்ச் சிவஞான போதமெனுஞ்
சித்தாந்தப் பொருளி யாவுந்
தாரசுமுன் யாநிறுவிச் சாயாமல்
அனுவபவத்தில் தமிழைப் பாடிப்
பராசிவ மயமாகிப் பரஞானத்
தனிமை நெறிப் பரிமே லேறி
நிராமயதே யத்தேகி நிறைதாயு
மானவனை நினைந்து வெல்வாம்'.

–தனிப்பாடல்.

ஆண்டுகள் தோறும் தைத்திங்கள் விசாக நட்சத்திரத்தன்று, மெய்யன்பர்கள் அனைவரும் தாயுமானார் குருபூசைத் திருநாளைக் கொண்டாடி, அவர்தம் சமரச ஞானக் கொள்கைகளை எங்கணும் விளக்கிட வேண்டும் எனவும், ஞானிகள் அனைவரும் தாயுமானாரின், "நினைவொன்று" என்ற தலைப்பில் வரும் ஒன்பது பாடல்களையும் நவரத்தினப்பாசுரங்களாகக் கருதிப் பாராயணம் செய்து, பொருளை நன்கு சிந்தித்து உணரவேண்டும் எனவும் கூறுவர்.

'வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே'.

– பராபரக்கண்ணி 206

வடலூர் வள்ளலார்-ரெட்டியப்பட்டி சுவாமிகள்.

சுவாமிகள் மாடு முதலிய பிராணிகள் இழுக்கும் வண்டிகளில் ஏறுவதில்லை. மறந்தும் எவ்வுயிர்க் கொலையும் செய்ததில்லை. யாருக்கும் எந்தவித ஜீவனுக்கும் எவ்வித இம்சையும் செய்வதில்லை. 'அகிம்சா பரமோதர்மா' என்னும் அருங் கொள்கையைக் கடைப்பிடித்து,

*'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிருந் தம்முயிர்போல்
எண்ணியுள்ளே,
ஒத்து உரிமை யுடைவராய் உவக்கின்றார் யாவர்
அவருளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமெனநான்
தேர்ந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என் சிந்தைமிக
விழைந்ததாலே.'*

என்னும் திருவருட்பா புகன்ற சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தந்தை எந்தை வடலூர் வள்ளற் பெருமான் போல சுவாமிகள் வாழ்ந்திருந்தனர்.

*'உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.'*

என்ற திருக்குறள் வாக்கிற்கேற்பத் திருமேனியில் எந்நோய் வரினும் மருந்தருந்ாது, விடியற்காலை குளிர் நீராடலும், திருநீற்றுப் பிரசாதமும் திருத்துழாய்த் தீர்த்தமும் அருந்தி, உடையவனிடம் உறுதிபூண்டு, திருவருளால் தீராத நோயெல்லாம் தீர்த்தருளிய, அருட்சட்டம் வகுத்தருளிய தவஞானி, ஸ்ரீ இரட்டியபட்டி சுவாமிகள் போல, நம் சுவாமிகளும் தமக்கு எந்நோய்வரினும், மருந்தே அருந்தாது பிரம்மானந்த மேலீட்டிலிருந்து, திருநீறு ஒன்றையே கொண்டுச் சுகம் பெறுவர். பிறருக்கு ஏற்படும் பிணிகளுக்கும் திருநீற்றையே தந்து குணம் பெறச் செய்வர்.

திருநீற்று மேனியர். திருகண்டிகை அணியர்.

சுவாமிகள் கோவிலூர் மரபு வழி வழுவாதிருக்க, "உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்" என்னும் அறவுரை வுள்ளத்தில் திகழுமேனும், ஐந்து முழக்கதராடையைக் காவி தோய்த்து உடுத்தி, முழங்கால் மறைய அணிவர். அத்துவித வேதாந்தியாக இருந்தாலும், சுவாமிகள், திருநீறும், உருத்திராக்க வடமும் தமது திருமேனியிலிருந்து நீங்காது அணிந்து சிவபக்திய முருகி வளர்ந்து விளங்கினர். அவர்களது உருவத்தோற்றம், சிவப் பொலிவாக விளங்கி அப்பர் சுவாமிகள் போல காட்சி தரும். சுவாமிகள் பரிபூரணமாகும் அந்நிலையிலும் திருநீற்று மேனியராய், உருத்திராக்க வடம் அணிந்தவராய், சிவநாமம் செபித்தவராய் இருந்தார்கள்.

ஆசாரசீலர்-சற்குண சாகரர்.

சுவாமிகள் நடுத்தர உயரமும், அளவான உடல் தோற்றமும் மாநிற மேனியும் உடையவர்கள். தனது வரிசையான மேல்வாய் பற்கள் வெளிப்படப் புன்முறுவல் பூத்தலர்ந்த திருவாயினராக, அனைவரையும் வரவேற்கும் பாங்கு, எவ்வளவு மன வேதனையுடன் வருவோரையும்; ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்திவிடும். உணவருந்தும்போதும், ஏனைய சந்தர்ப்பங்களிலும், பரம சுத்தமாகவே இருப்பர். எப்போதும் சாத்வீகமான உணவை சிறிதளவே உண்பார்கள்.

> *'புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்*
> *அறங்கூறும் ஆக்கந் தரும்.'*

என்னும் புறங்கூறாமைத் திருக்குறளுக் கேற்பப் பிறரைப் பற்றி எக்குறையும் பேச மாட்டார்கள். பிறரும் மற்றவர் குறையைத் தம்மிடம் பேச அனுமதிக்க மாட்டார்கள். பேசும் பொழுது உலகியல் வார்த்தைகளைப் பேசாது, சாத்திர மறைநூல் அனுபவ வாக்கியங்களை இலக்கண வழுவின்றி அவசரமில்லாது, அமைதியாகச் சிறிது நேரமே பேசுவார்கள்.

'தீர்த்த யார்க்குஞ் செவிக்கினி தாயின
வார்த்தை மாமருந் தேயென லாவதா
மோர்த்து மெய்ம்மொழி கூறுத லோதுதல்
வார்த்தையாற் – பண்ணு மாதவ மாவதே?'

என்னும் பகவத் கீதை 17ம் அத்தியாயத்தில் கூறியாங்கு வருகின்றவர்களிடம் மெய்யறிவுரைகளையே பேசுவர். அவ்வுரைகளைக் கேட்டு வந்தவர்கள் நற்பயனடைவர். இன்னும் அளவற்ற நற்குணங்களும் - பண்புகளும் நம்முடைய சுவாமிகளிடம் இயல்பாகவே அமைந்திருந்தன; சுருங்கக்கூறின் சற்குண சாகரமே மானிடவடி வந்தாங்கி வந்தெனச் சொல்லுவோமானால் அது மிகையாகாது.

சுவாமிகளின் அருள்நோக்கு - உபதேசப் பெருமை.

நமது சுவாமிகளிடம் விபூதி முதலியன வாங்கப் பெற்றவர் கட்கு அவரவர்கள் விரும்பியவாறு புத்திரப்பேறு, தனதானிய சம்பத்து, பிணிவிலகல், கல்வி அபிவிருத்தி, திருவருட்பேறு, அருள்ஞானம் முதலிய அநேக அநுக்கிரகங்கள் ஏற்படலாயின, அவைகளை விரிக்கின் நூல் பெரிதாகிவிடும்.

சுவாமிகள் அடியார்களுக்கெல்லாம் ஞான சாத்திரங்களைப் போதனை செய்தும், அவ்வவர் பக்குவத்திற்கேற்பவே விரும்பும் மெய்யன்பர்கட்கு, பஞ்சாக்ஷராதி- மகாவாக்கியாதி-மந்திர உபதேசங்களைச் செய்தும், இல்லற- துறவற நெறிகளை அன்பர்கள் நிலைகட்கு ஏற்பச் சொல்லியும், தாம் முற்றும் துறந்த முனிவராக சந்நியாச ஆச்சிரம தருமத்திற்கேற்பச் சிறிதும் வழுவதலின்றியும், இடைவிடா நிட்டாபரராகவும் இருந்து வந்தனர். ஆத்ம சாந்தி அடைந்தவராகத் தோற்றமளித்தனர்.

மோன சகஜசமாதி - பரிபூர்ண ஒடுக்கநிலை.

சுவாமிகளுக்கு 62-ம் வயது நடப்பில் இருந்து வந்தது. ஆறு மாத காலத்திற்கு முன்பே, உலகியல் விவகாரங்களைக்

குறைத்து விலகிக்கொண்டு, மோன நிலையிலும், சதா சகஜ சமாதி நிலையிலும் இருந்தவாறே, சிறிது ஜீரகக் கஷாயம் மட்டுமே அருந்தி வந்தனர். பிறவிப் பெருங்கடலை நீந்தித் தாம், இனிப்பிறவாப் பெருங்கரை ஏறப்பெற்றவராக, அருள் திருமேனியராக -தேஜஸ்வியாகக் காட்சியளித்தனர்.

ஜீவ சமாதி நிலையில் தாம் விரைவாகப் பரிபூரணப் பெருநிலையினை எய்திடப் போவதைக், குறிப்பாகவே அணுக்கத் தொண்டர்களிடம் சூசிப்பித்துத், தமக்கென சமாதி ஆலயம் எழுப்ப வேண்டாமெனக் கூறலாயினார். சுவாமிகளது சித்தி நிலையை அறிந்த அணுக்கத் துறவிகளும், அன்பர்களும், அநேக மடாதிபதிகளும், சந்நியாசிகளும் சாந்தியாச் சிரமத்தில் ஒருங்குகூடி, சுமார் ஒரு மண்டல காலம் சுவாமிகளைப் புடை சூழ, விபூதி-உருத்தராக்கம் தரித்தவர்களாக அமர்ந்து, "ஹர-ஹர சம்போ மஹாதேவ" என்று இரவு பகலாக இடைவிடாது அகண்ட சிவநாம கோஷமாகக் கோஷித்துக் கொண்டிருந்தனர்.

விதேக கைவல்யம் - சம்பூரணம் பிராப்தி.

சுபஸ்ரீ விகாரி வருடம் மாசித்திங்கள் 11-ம் நாள் (23-2-1960) மங்களவாரமும், உத்தராயண புண்ணியகாலமும், அமரபட்சமும், துவாதசி திதியும் உத்திராட நட்சத்திரமும் கூடிய நன்னாளில் சுவாமிகள் இரவில் தாம் எப்பொழுதும் எழுந்து நிட்டைகூடும் புனித நேரமான, இரண்டு மணி (50 நாழிகை) அளவில், சிவானுபூதிச் சொரூப சச்சிதானந்த வியோமாதீதப் பிரஹ்ம மாத்திரமாகிய, விதேக கைவல்யத்தை சுவாமிகள் எய்தி இன்புற்றார்கள்.

ஓம் ஸ்ரீமத் பரம் ப்ரஹ்ம குரும் ஸ்மராமி!
ஓம் ஸ்ரீமத் பரம் ப்ரஹ்ம குரும் பஜாமி!
ஓம் ஸ்ரீமத் பரம் ப்ரஹ்ம குரும் வதாமி!
ஓம் ஸ்ரீமத் பரம் ப்ரஹ்ம குரும் நவாமி !!

அதன்போது சுற்றிலுமிருந்த பரிபக்குவர்களாகிய பெரியோர்களது மனமாதனைச் சற்றுப் போது ஆத்மாவில் அசைவற்று நின்றன. சுகந்த பரிமளமாகிய சாந்திக் காற்றுக்கள் மெல்லென வீசின. எங்கணும் அமைதி நிலவியது. வானத்தினின்றும் சந்தனம் பன்னீர் தெளிப்பது போன்று நன்னீர் மழைத்துளிகள் யாண்டும் பரந்து பொழிந்தன.

சமாதி ஆலயமும் - சிவலிங்கப் பிரதிட்டையும்.

சுவாமிகள் பரிபூரண விதேக கைவல்யம் அடைந்த தெனப் பலருக்கும் அறிவித்து, விசேட அபிடேக அலங்கார நைவேதனமாகிய பூசைகளை சிறப்புச் செய்வித்துத் தரிசித்து, அலங்கார புட்ப விமானத்தில் திருமேனியை எழுந்தருளச் செய்து, வீதிவலமாக இல்லங்கள் தோறும் கொணர்ந்து தரிசித்து அனைவரும் விபூதி பெற்றனர்.

'சாந்தியாச்சிரமத்தில்' சுவாமிகள் நிட்டை கூடும் புனித அறையிலேயே, சமாதிக் கோயில் விதிப்படியமைத்துச் சுவாமிகளது பொன்னார் புனிதத் தெய்வத்திருமேனியை எழுந்தருளப் பண்ணி, மேலே சிவலிங்கப் பிரதிட்டை செய்து வணங்கி, மனத்தில் தியானித்து, வாயுற வாழ்த்தினர். சுவாமிகள் சிவலிங்க சொரூபடதக வதிந்துப் பிரார்த்தித்த மெய்யன்பர்கட்குப் பரிபூரண அநுக்ரகம் புரிந்து கொண்டு வருகின்றார்கள்.

சுவாமிகளது சமாதி அதிட்டானத்தில் நித்திய கால பூசையும், குருவார வழிபாடும், மாதாந்திர உத்திராட நட்சத்திரத்தில் விசேட பூசையும், ஆண்டுதோறும் புரட்டாசித் திங்கள் பூரட்டாதி நட்சத்திரத்தில் சுவாமிகளது ஜயந்தி விழாவும், மாசி மாதம் உத்திராட நட்சத்திரத்தில், மகா குருபூசைப் பெரு விழாவும் சிறப்பாக அன்பர்களால் நன்கு நடத்தப்பட்டு வருகின்றன.

'காமனை யெரித்த கண்ணுத லென்கோ கருதருஞ் சுகமுனி யென்கோ
மாமறை யுணர்ந்த வசிட்டனே யென்கோ வாதநாரா யணமுனி யென்கோ
தோமறு நாவுக் கரசனே யென்கோ துகளறு துறவிறை யென்கோ
நாமதே வென்கே வள்ளலே நடேச மாதவ ஞான தேசிகனே.'

—வாணியம்பாடி ஸ்ரீ.ம.கோவிந்தசாமி சுவாமிகள்.

சுவாமிகளது சுய சரிதம் இனிது நிறைவேறியது.
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

உ

சிவமயம்

காரியானூர்

ஸ்ரீலஸ்ரீ நடேச ஞானதேசிக சுவாமிகள்

பரிபூரண காலம் பாடல்.

வாணியம்பாடி ஸ்ரீ.ம.கோவிந்தஸ்வாமி

சுவாமிகளால் இயற்றப் பெற்றது.

பன்னீர்சீர் நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்கொண்ட கலியினை யாயிரத் திருபது
சேர்விகா ரிய்யாண்டில்
சிவமாசி மதியொன்றில் மங்களவா ரந்தன்னில்
செறியமர மக்ஷமதிலே
பார்புகழ் துவாதசி உத்ராட மீனமதில்
பகரிரவு சாந்தியோடு
பவித்ரமாய் இருபது நாழிகை யதனிலே
பரமபா வனமாகிய
பேர் பிரம சுருபத்தில் பேசரிய நிட்டையாய்
பிரிவிலா முத்தியுற்றான்
பேச்சினில் மனத்தினில் நடத்தையில் ஞானநிலை
பெரிதுற்ற துறவர்திலகம்
வார்சடைச் சிவபிரான் மனத்துக் கினியவன்
வளர்காரி யாரியானூரில்
வதிந்தருள் நடேசமுனி வன்இணை திருவடிகள்
வாழ்த்தியே உய்வாமரே.

சுவாமிகள் பரிபூரணமான காலம்.

கத-சாலி வாகனா-வரு 1881. கத-கலியப்தம் 5060. பஸலி-1369. சுப-விகாரி வருடம் மாசி மாதம் 11ம்நாள் இங்கிலீஸ் 23-2-1960 செவ்வாய்க்கிழமை உத்திராயணம்-சிசிரருது அமரபட்சம் துவாதசி திதியும் உத்ராட நட்சத்திரமும் கூடிய பொன்னாளில் இரவு மணி 2.00 மகர சந்திர காலத்தில் பரிபூரணம் ஆனார்கள்.

சுபம்.

காரியானூரில் ஸ்ரீலஸ்ரீ நடேச ஞானதேசிக சுவாமிகள்
விதேக முக்தியடைந்த போது
அன்பர்கள் இசைத்த இரங்கற்பா

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

மங்கா துயர்ந்த பொன்மேனி
மறைவால் ஏங்கி மிகவுருகி
தங்கம் அனைய தாயர்களும்
தவிக்கப் பார்த்துச் சகிப்பேனோ
இங்குன் இனிய பொன்மொழியை
இனியுங் கேட்கப் பெறுவேனோ
நங்கை மார்கள் மயக்கொழித்த
நடேச குருவே நவில்வாயே.

எங்கும் நிறைசற் சித்தின்ப
வெழிலார் மேனிக் கொருபோதும்
பங்க மேது மில்லெனினும்
பந்த முடையோர்க் கவ்வியல்பை
அங்க மொன்றி யுரைப்பதலால்
ஆகு மோவின் னருளுவாந்
துங்க நடேச வுருமறையின்
துயர்கள் தொலைப்பா ரெவர் சொல்வாய்.
-வாணியம்பாடி - ம.கோவிந்தசாமி சுவாமிகள்

நேரிசை வெண்பா.

சாந்தம் பொறுமை சமதமுதற் சாதனங்கள்
வாய்ந்தகுணக் குன்றாம் மாதவனே !-ஏய்ந்தசிவ
ஞான மணியே நடேசகுரு தேசிகனே !
வானபதம் பெற்றாயோ வந்து.

மாணவர்க ளெல்லாம் வணங்கிநிற்க நாள்தோறும்
ஞானநூற் பாடம் நவின்றருளும் - மாண்புடைய
செம்மல் நடேச சிவகுருவே! சின்மயனே!
அம்மவுனைக் காண்பதென்றோ யாம்.

அண்ணா மலையில் அடியார்கள் நாள்தோறும்
தண்ணா ரமுதுண்ணும் தம்மடத்தில் - நண்ணா
மடாதி பதியாய் வயங்கிய மெய்ஞ்ஞான
நடேச குருவே நம.

தூயதமிழ் நாட்டுத் துறவிகள் சங் கத்திலே
ஏய துணைத்தலைவ ராயிருந்தாய் - தாயகத்தில்
பன்னிரண்டு மாநாடு பாங்காய் நடத்துதற்கு
என்னிருகண் போலிருந்தா யே.

காரியானூரில் கவின்சாந்தி ஆசிரமம்
சீராகக் கட்டுவித்தார் சீடரெல்லாம் - ஊரார்கள்
வந்து வணங்க வரந்தருநன் மாதவனே
அந்தோ மறைந்து விட்டா யா.

கோவிலூர் ஆதீன கோவரம் குருமகா
தேவரின் சீட சிகாமணியே - நாவினால்
ஞான உபதேசம் நாங்களுய்யச் செய்துவந்தாய்
ஏனோ மறைந்தாய் இசை.

அஞ்ஞானக் காட்டை அழிக்கின்ற அக்கினியாம்
மெய்ஞ்ஞான பானுவாய் வீற்றிருந்து - எஞ்ஞான்றும்
ஞானஒளி வீசும் நடேசகுரு மாமணி நீ
போனவிடம் எங்கே புகல்.

வேண்டும்போ தெல்லாம் வெளிப்பட்டு நின்னடியார்
காண்டற் கெளிதாகக் காட்சிதந்து - ஆண்டருள்வாய்
கற்பகமே ஞானக் கனியாய் நடேசகுரு
தற்பரனே நின்றாள் சரண்.

சென்னை - சுவாமி அருணகிரிநாதர்

நூற் பயன்.

சீரலகு நடேசகுரு நாதன் தாளைச்
  சிந்தைதனில் எப்பொழுதும் வந்தித் தேதான்
நேருறவே போற்றிமிகப் பணிவா யாகில்
  நினைத்தவெலாங் கைகூடும் நீணிலத்தில்
ஏருறவே பெருவாழ்வை இணைந்து நிற்பாய்
  ஈதலாற் பரஞான இன்புஞ் சேர்வாய்
தாரிலகு மைந்தாநின் றனக்கே இந்தச்
  சற்குருவின் பேரருஞ் சாருந் தானே

கருப்புக்கிளார் புலவர் சு.அ.ராமசாமி.

பொங்கும் மங்களம் எங்கும் மலர்ந்து பொங்குக.

ஓம். தத். ஸத்.